உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 8 வியாழக்கிழமை (24-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:238





திருநெல்வேலி, பலாலி வீதியில் அமைக்கப்பட்டுள்ள லெப்டினனட் செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபிக்கு சிறுவன் ஒருவன் மலரஞ்சலி செய்கிறான். நேற்று இந்த நினைவுத் தூபிக்கு அருகே காவலரண் ஒன்றை அமைக்க முயன்ற இராணுவத்தினருடன் பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்ட காட்சி.

*(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## ஈ.பி.டி.பியினர் மிரட்டியதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை24

வேலணை, துறையூர் மீன் சந்தைக்கு நேற்றுக்காலை சென்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலர் அங்கிருந்த பொதுமக்களை கடுமையாக மிரட்டியதாக துறையூர் கடற்றொழிலாளர் சங்கம் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

ஈ.பி.டி.பி உறுப்பினர்களான நெப்போலியன், பாலதீபன், போல் ஆகியோரும் ஸ்ரீலங்காப் பொலீஸாரும் இணைந்து நேற்றுமுன்தினம் இரவு புங்குடுதீவுப் பகுதிகளில் துண்டுப்பிரசுரங்களை ஒட்டியதாகவும் -

அவற்றை நேற்றுக்காலை இனந்தெரியாத சிலர் கிழித்தெறிந்துவிட்டதாகவும் -

இது தொடர்பாகவே ஈ.பி.டி.பியினர் நேற்றுக்காலை துறையூர் மீன் சந்தைக்குச் சென்று அங்கிருந்த மீனவர்கள் மற்றும் ஏனைய மக்களை மிரட்டினர் எனவும் -

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் சைக்கிள் ரோந்து அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

திருநெல்வேலி, கல்வியங்காடு, நல்லூர்ப் பகுதிகளில் நேற்று படையினரின் சைக்கிள் ரோந்துகள் அதிகரித்துக் காணப்பட்டன.

வீதிகளில் சைக்கிளில் ரோந்து சென்ற படையினர் பொலீஸாரின் உதவியுடன் சோதனைகளில் ஈடுபட்டனர்.

கடந்த சில நாள்களாக இத்தகைய ரோந்துகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. (ஜ-4-86)

### தொடர்புசாதன இறக்குமதி விவகாரத்தில்

# நோர்வேத் தூதரகம் தனது சிறப்புரிமையை மீறவில்லை

# செல்லக்கிளி நினைவிடம் அருகே திடீரென காவலரண் நிறுவ முயற்சி

### மக்கள் எதிர்ப்பை அடுத்து இராணுவம் விலகியது

யாழ்ப்பாணம்,ஜூலை24

லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மான் நினைவாக பலாலி வீதியில் தபாற்பெட்டிச்சந்திக்கு அருகே - வீதியோரத்தில் - புதிதாக நிறுவப்பட்ட நினைவுக்கல் அருகே - நேற்றுக் காவலரண் ஒன்றை அமைக்க இராணுவத்தினர் முயன்றனர்.

பெரும் எண்ணிக்கையான படையினர் வாகனங்களில் வந்து அவ்விடத்தில் இறங்கி காவலரணை நிறுவ முயன்றனர். அவ்விடத்தில் கூடி நின்ற பொதுமக்கள் படையினரின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே அங்கு பெரும் முறுகல் நிலை உருவாகியது.

1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி திருநெல்வேலி தபாற்பெட்டிச் சந்திப் பகுதியில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில், தாக்குதலைத் திட்டமிட்டு நடத்தியவரான புலிகளின் மூத்த போராளி செல்லக்கிளி (சதாசிவம் செல்வநாயகம் - திருநெல்வேலி) காயமடைந்து பின்னர் வீரச்சாவடைந்தார். அவரது 20ஆவது நினைவுதினம் நேற்றாகும்.

அதனையொட்டி திருநெல்வேலி தபாற்பெட்டி சந்திப்பகுதியில் நினைவுக்கல் ஒன்று புதிதாக நிறுவப்பட்டு நேற்று மாலை அது திறந்துவைக்கப்பட்டது.

திறப்புவிழா வைபவம் நடைபெறுவதற்கு முன்பாக நேற்று நண்பகல் அளவில் வாகனங்களில் வந்த பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் நினைவுக்கல்லுக்கு அருகே தகரங்கள், முட்கம்பிகள் கொண்டு புதிய காவலரண் ஒன்றை நிறுவ ஆயத்தம் ஆகினர். இதனைக்கண்ட பொதுமக்கள் படையினரை நெருங்கி அங்கு காவலரண் அமைப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்தனர்.

புதிதாக காவலரண்களை நிறுவு

(14ஆம் பக்கம் பார்க்க)

# வான் தடம்புரண்டதில் ஏழு பேர் படுகாயம்!

## குடத்தனையில் நேற்று சம்பவம்

கரவெட்டி,ஜூலை24

வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் வான் ஒன்று தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த சாரதி உட்பட 7பேர் படுகாயமடைந்தனர்.

பருத்தித்துறை - குடத்தனை வீதியில் 6ஆம் கட்டையடியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து குடத்தனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம், வானின் 'றொட்' உடைந்ததில் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

குடத்தனை வாசிகளான அந்தோனிப்பிள்ளை சுபாசினி (வயது 18), அந்தோனிப்பிள்ளை டிலக்சிகா (வயது 21), மரியதாஸ் அமலதாஸ் (வயது 45), சுந்தரலிங்கம் இராசா

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியினரின் கேள்விக்கு சபையில் பிரதமர் பதில்

கொழும்பு,ஜூலை 24

**தொடர்புசாதன இறக்குமதி விவகாரத்தில் நோர்வேத் தூதரகம் தனது சிறப்புரிமை எதனையும் மீறவில்லை என்று நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. வெளிநாட்டிலிருந்து விடுதலைப் புலிகள் வானொலித் தொடர்பு சாதனங்களைப் பெற்றது தொடர்பாக நோர்வேத் தூதரகம் மீது குற்றஞ்சாட்டி ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.**

நோர்வேத் தூதுவர் தமக்குரிய தூதரக சிறப்புரிமைகளைத் தவறான வழியில் பயன்படுத்தியுள்ளார். அச்சிறப்புரிமைகளைப் பிரயோகித்து விடுதலைப் புலிகளுக்கு அதிசக்தி வாய்ந்த ஒலிபரப்பு தகவல் தொடர்பு சாதனங்களை இறக்குமதி செய்து வழங்கியுள்ளார்.

இப்படியான செயல் நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் ஓர் அச்சுறுத்தலாகும் நோர்வேத் தூதரகம் இறக்குமதி செய்து புலிகளுக்கு வழங்கிய கருவிகள் என்ன? இவை பற்றி

(14ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றத்தில் பிரதமர் வழங்கிய இலத்திரனியல் பதில்!

கொழும்பு,ஜூலை24

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு பத்திரங்களைப்பயன்படுத்தி பதில் அளிப்பது சர்தாரணமான வழக்கம் ஆகும். ஆயினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சபையில் ஜே.வி.பி. உறுப்பினர் விஜிதஹேரத் எழுப்பிய கேள்வியின் ஒரு பகுதிக்கு இலத்திரனியலை தொடர்புபடுத்தி பதிலளித்தார்.

தூதரகங்களுக்கான பொருள்கள் தருவிக்கப்படுவது 1961ஆம் ஆண்டு வியன்னா ஒப்பந்தத்திற்கு அமையவே என்று குறிப்பிட்ட பிரதமர், அது பற்றிய மேலதிக விபரத்தை 'வெப்' தளத்திலிருந்து அறிந்துகொள்ளமுடியும் எனவும் கூறினார்.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் ஒருகேள்விக்கு இலத்திரனியல் தொழில்நுட்பத்தைத் தொடர்புபடுத்தி பதிலளிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். (ஐ)

# வடக்கு மக்களின் உண்மை நிலையை உணர்த்த கொழும்பில் நேற்று பொங்குதமிழ் தெளிவரங்கு

கொழும்பு,ஜூலை24

பொங்குதமிழ் எழுச்சி பற்றி தென்னிலங்கை சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் கொழும்பு நிப்போன் ஹோட்டலில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் சார்பாக பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவின் யாழ்.பல்கலைக்கழக இணைப்பாளரும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவருமான ஜீ.ஸ்ரீதரன், சர்வதேச தமிழீழ மாணவப் பேரவைத் தலைவர் எஸ். கஜேந்திரன், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி சிதம்பரநாதன், கலாசார அலுவலர் விந்தன், அரங்கச் செயற்பாட்டுப் பொறுப்பாளர் கிருஷ்ணவேணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகவியலாளர்கள் 30இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

பொங்குதமிழ் எழுச்சி என்றால் என்ன? அது ஏன் கொண்டாடப்படுகிறது? அதன் தோற்றம் என்பன தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு முதலில் விளக்கமளிக்கப்பட்டது.

பின்னர், 2003ஆம் ஆண்டு பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் மக்கள் கலந்துகொண்ட விதம் தொடர்பான வீடியோப் படக்காட்சி ஒன்று அங்கு காண்பிக்கப்பட்டது.

இறுதியாக, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு ஏற்பாட்டாளர்களினால் பதிலளிக்கப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவ ஒன்றியத்தின் தலைவர் ஸ்ரீதரன் தெரிவித்ததாவது:-

பொங்குதமிழ் எழுச்சி தொடர்பா

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சதாம் ஹுசைனின் இரு மகன்களும் ஈராக்கில் கொல்லப்பட்டனர்!

## அமெரிக்க இராணுவம் அறிவிப்பு

பக்தாத்,ஜூலை24

சதாம் ஹுசைனின் இரு மகன் களான உதய் (வயது-39) மற்றும் குசே (வயது-36) ஆகியோர் நேற்று முன்தினம் கொல்லப்பட்டதாக அமெரிக் கக் கூட்டணிப் படைகளின் தலைவர் ஜெனரல் ரிகார்டோ சான்செஸ் பக்தாத்தில் அறி வித்தார்.



வடக்கு ஈராக்கின் மோசுல் நகரில் அமெரிக்கப் படையினர் நேற்றுமுன்தினம் தேடுதல் நட வடிக்கையில் ஈடுபட்டனர். அப் போது சதாம் ஹுசைனின் இரு மகன்களும் மாளிகை ஒன்றில் மறைந்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து அந்த மாளிகையை அமெரிக்கப் படையினர் சுற்றிவளைத்தனர். அவ்வேளையில் மாளிகைக்குள் மறைந்திருந்த சதாம் ஆதரவாளர்கள் அமெரிக்கப் படையி னர் மீது தாக்குதல் நடத்தினர். அமெ ரிக்கப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சண்டை சுமார் ஆறு மணித் தியாலயங்கள் தொடர்ந்தது. இறுதி யாக அந்த மாளிகையிலிருந்த சதா மின் ஆதரவாளர்கள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறந்தவர் களில் சதாமின் இருமகன்களும் அடங்குவர்.

- இவ்வாறு ஜெனரல் ரிகார்டோ சான்செஸ் தெரிவித்தார். இச்சண்டை முடிந்த பின்னர் கொல்லப்பட்டவர் களின் உடல்கள் அடையாளந்தெரி யாத அளவுக்குச் சேதமடைந்திருந் ததாகவும் -

இதனால், சதாமின் மகன்கள் கொல்லப்பட்டமை உடனடியாக உறு திப்படுத்தப்படவில்லை என்றும் - தீவிர சோதனை நடத்திய பின்னரே சதா மின் மகன்கள் கொல்லப்பட்டதை அமெ ரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்திய தாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இச்சண்டையில் சதாமின் இளம்வயதுப் பேரனும் கொல் லப்பட்டதாகத் தகவல் வெளியாகி யுள்ளது.

சதாமின் மகன்கள் தங்கி யிருந்த இடம் குறித்த தகவ லைத் தந்தவர் - அமெரிக்கா முன்னர் அறிவித்தபடி - 15 மில்லியன் டொலர்களைப் பரிசாகப் பெறவுள்ளார்.

ஆயினும், ஈராக்கில் அமெ ரிக்கப் படையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையிலும், ஈராக் மீதான போருக்கு அமெரிக்காவும், பிரிட்டனும் பொய்க் குற்றச் சாட்டுகளைக் காரணமாக முன்வைத்ததாக விமர்சனங் கள் எழுந்துள்ள நிலையிலும், சதாமின் மகன்கள் கொல்லப் பட்டுள்ளமை அமெரிக்காவுக்கு சந்தோஷமான தருணமாக இருக்காது என்று வாஷிங்டனில் உள்ள பி.பி.ஸி. செய்தியாளர் கோர்டன் கொரேரா கூறியுள்ளார்.

சதாமின் மகன்களை கொல்வதை விட சதாம் ஹுசைனைப் பிடிப்பது அல்லது கொல்வது மட்டுமே அமெ ரிக்காவுக்குப் பூரணமான நன்மை தரும் என்று பி.பி.ஸியின் உலக விவகாரச் செய்தியாளர் மைக்வூல்ட் ரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

சதாமின் ஆட்சியை நிலை நிறுத்த உதவிய வெளிநாட்டு சட்ட விரோத வர்த்தகங்களுக்குப் பொறுப்பு வகித்த உதய், ஈராக்கின் செய்தி ஊடகங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவராவார். நாட்டின் பிரதான பிரதேசங்களின் பாதுகாப் புக்கு குசே பொறுப்பு வகித்தார்.

(ஒ)

# செப்.11 தாக்குதலில் சவூதிக்கு தொடர்பு?

வாஷிங்ரன்,ஜூலை24


அமெரிக்காவில் 2001 செப்ரெம் பர் 11 ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் சவூதி அரே பியா முக்கிய பங்கு வகித்ததற்கான சந்தேகம் இருப்பதாக அமெரிக்க நாடா ளுமன்ற விசாரணையில் தெரியவந் துள்ளது.

நாடாளுமன்ற புலனாய்வு விசார ணைக் குழுவின் இந்த அறிக்கை நாளை வெளியிடப்படவுள்ளது. இந்த அறிக்கை வெளியாக முன்னரே 'நியூஸ்வீக்' பத்திரிகை இதிலுள்ள முக்கிய விடயங்களை வெளியிட்டுள் ளது.

அமெரிக்காவில் அல்கெய்டா தீவிர வாத அமைப்புகளின் செயற்பாடு குறித்த முக்கியமான ஆதாரங்களை தீவிரமாக ஆராய்ந்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க புலனாய் வுத்துறை தவறிவிட்டது.

விமானத்தைக் கடத்திய முக்கிய கடத்தல்காரர்களான கலித் அல் மிஹ்தார், நவாஸ் அல்-ஹஸ்மி ஆகி யோருக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய சகாவாக விளங்கிய உமர் அல் - பயோமி, சவூதி அரேபிய அரசின் உள வாளி.

கடத்தல்காரர்களுக்கும் பயோ மிக்கும் நெருங்கிய தொடர்பு உள் ளது. சவூதியின் இரகசிய உளவாளி அவர் என்று தெரியவந்த போதிலும் அவரது பேச்சுக்களைப் பதிவுசெய்ய புலனாய்வுத்துறை தவறிவிட்டது என்று அப்பத்திரிகை தெரிவித்துள் ளது.



ஆபிரிக்க நாடான லைபீரியாவின் தலைநகர் மொன்ரோவியாவில் அதிபர் சாள்ஸ் டெய்லரின் ஆதரவு இராணுவத்தினருக்கும் அதிபரைப் பதவி விலக்கப் போராடும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 5 நாள்களாக இடம்பெற்றுவரும் உக்கிர சண்டையில் உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்காகியுள்ளது.

இச்சண்டையில் உயிரிழந்த குழந்தை ஒன்றின் சடலத்துடன் அதன் தாயும் உறவினரும் கதறி அழுவதையும் காயமடைந்த பெண் ஒருவர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்படுவதையும் படத்தில் காணலாம்.

# நிருபர் ஷாராவின் உடலை ஒப்படைக்குமாறு ஈரானிடம் கனடா எழுத்து மூலம் கோரியது

ஈரான் பொலீஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது மரணமான கனேடியப் பத்திரிகையாளர் ஷாரா வின் உடல் கனடாவுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று ஈரா னுக்கான கனடா தூதுவர் பிலிப் மக்கினோன் கேட்டிருக்கிறார்.

ஈரான் சிறைச்சாலை ஒன்றுக்கு வெளியில் நின்று அதனைப் படம் பிடித்துக் கொண்டிருந்தபோது ஷாரா கைதுசெய்யப்பட்டார். விசாரணை யின்போது தலையில் அடித்ததால் அவர் மயக்கம் அடைந்த பின்னர் மரணமானார்.

அவரது உடல் ஈரானிலேயே புதைக்கப்பட வேண்டும் என்று அவ ரது தாயார் கூறுவதால் ஷாராவின் உடல் அந்த நாட்டிலேயே புதைக் கப்படும் என்று இதுவரை கூறப்பட்டு வந்தது.

ஷாராவின் மகன் ஸ்ரீபன், மொன் றியலில் இருக்கிறார். அவர் தனது தாயாரின் உடல் கனடாவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று வலி யுறுத்திவந்தார். இந்தக் கருத்து வேறு பாடுகளினால் ஷாராவின் உடலை எங்கு புதைப்பது என்ற குழப்பம் நிலவி வந்தது. எனினும், ஷாராவின் உடல் கனடா கொண்டுவரப்படுவதற்கு குடும் பத்தவர் மத்தியில் இணக்கம் காணப் பட்டிருக்கிறது. அதனைக் கனடா வெளிவிவகார அமைச்சும் உறுதி செய்திருக்கிறது.

அதனையடுத்து, ஷாராவின் உடலை கனடாவிடம் ஒப்படைப்பதற் கான வேண்டுகோளை எழுத்து மூலமாக ஈரான் அரசிடம் கனேடியத் தூதுவர் கொடுத்திருக்கிறார்.

இதனிடையே, அரசியல் சீர்திருத் தத்தை ஆதரிக்கும் ஈரானிய நாடாளு மன்ற உறுப்பினர்கள் பலரும் ஷாரா வின் உடல் கனடாவுக்கு எடுத்துச் செல்லப்படவேண்டும் என்று வலியு றுத்தியிருக்கிறார்கள்.

ஷாரா ஈரானிய அரச அதிகாரி களினால் தாக்கப்பட்டிருக்கிறார் இச் சம்பவம் தொடர்பாக வழக்குத் தொடர்ந் தால்,பொலீஸ் அதிகாரி தனது பத வியை இராஜினாமாச் செய்யவேண் டும் என்றும் அவர்கள் கேட்டிருக்கி றார்கள்.

# சட்டவிரோத குடியேறிகள் 15 பேரை அமெரிக்கா கியூபாவிடம் ஒப்படைத்தது

புளோரிடா,ஜூலை24

கியூப அரசின் படகைக் கடத்தி அதன்மூலம் சட்டவிரோதமாக அமெ ரிக்காவுக்கு செல்ல முயன்றவேளை யில் பிடிபட்ட 15 பேரையும் அமெ ரிக்க அதிகாரிகள் கியூபாவிடம் ஒப் படைத்துள்ளனர். இது இரு நாடு களுக்கும் இடையிலான ஒத்துழைப் பைக் காட்டும் அரிய சமிக்ஞை என்று தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக அமெரிக்கா செல்லும் தனது நாட்டவர்களுக்கு கியூப அரசு கடும் தண்டனைகளை விதித்து வருகிறது. கடந்த ஏப்ரல் மாதம் படகு ஒன்றைக் கடத்தி அமெ ரிக்காவுக்கு செல்ல முயன்ற மூவ ருக்கு கியூபா மரண தண்டனை விதித் தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே, மேற்படி 15 கியூப நாட்டவர்களை அமெரிக்கா விடுவித்துள்ளது.

மேற்படி 15பேரும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்று கியூபா உறுதிய ளித்ததையடுத்தே அவர்கள் விடுவிக் கப்பட்டனர் என்று அமெரிக்கா கூறி யுள்ளது.

கடத்திச் சென்ற 36அடி நீள மான இந்தப்படகையும், இதிலிருந்த வர்களையும் அமெரிக்க கரையோரப் படையினர் புளோரிடா நீரிணையில் வைத்து கைதுசெய்திருந்தனர்.

கியூபாவில் இருந்து அமெரிக்கா வுக்கு சட்டவிரோதமாகச் செல்பவர் கள் அமெரிக்கப் படைகளிடம் அகப் பட்டால் மீண்டும் கியூபாவிற்கு அனுப் பப்படுகின்றனர். ஆனால், அமெரிக்க கரையை சென்றடைந்தவர்களுக்கு அங்கு ஒரு வருடத்தின் பின்னர் வதி விட உரிமை வழங்கப்படுகிறது.

(ஒ)

## மின்சாரம் தாக்கி 15பேர் உயிரிழப்பு!

போர்ட்-ஓ-பிரின்ஸ்,ஜூலை24

மத்திய அமெரிக்க நாடான ஹெய் டியில் கூடைப்பந்தாட்டப் போட்டி யொன்றின்போது உயர் அழுத்தம் கொண்ட மின்சார கேபிள் ஒன்று அறுந்து பார்வையாளர்கள் மீது விழுந் தது. இதில் மின்சாரம் தாக்கி 15 பேர் உயிரிழந்தனர்.

மின்ஒழுக்குக் காரணமாகவே கேபிள் அறுந்து விழுந்ததாக உள் ளூர் அதிகாரிகள் கூறினர். இந்த விபத்தில் 11 வயதுச் சிறுமி ஒருத்தி யும் 14 ஆண்களும் உயிரிழந்துள்ள னர். மேலும் இருவர் எரிகாயங்களு டன் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.



இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் உள்ள பஞ்சகுலா என்ற இடத்தைச் சேர்ந்த அஜயும் மனிஷாவும் இந்து, சீக்கிய, இஸ்லா மிய, கிறிஸ்தவ மதங்களின் திருமணச் சடங்குகளை ஒருங்கே நிறைவேற்றி கடந்த திங்கட்கிழமை திருமணம் செய்துகொண் டனர். மதங்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் நடவடிக்கை யாகவே இவ்வாறு தமது திருமணத்தை நடத்தியதாக அவர்கள் கூறினர்.

# பி.பி.ஸிக்கு கெலி கூறியது என்ன? பகிரங்க விசாரணை நடக்கும்

விஞ்ஞானி டேவிட் கெலியின் மரணம் குறித்து வெளிப்படையான விசாரணைகள் நடைபெறும் என்று, கெலியின் மரண விசாரணைகளை நடத்தவென பிரிட்டிஷ் பிரதமர் நிய மித்துள்ள நீதிபதி ஹட்டன் தெரிவித் துள்ளார்.

பி.பி.ஸி. கிளப்பிய சர்ச்சையினா லேயே கெலி மரணமானார் என்ற குற் றச்சாட்டு எழுந்துள்ள இந்நிலையில், கெலியின் மரணத்தால் அங்கு அர சியல் சர்ச்சையும் கிளம்பியுள்ளது.



கெலியின் மரணம் குறித்து சுதந் திரமான விசாரணைகளை நடத்த நீதிபதி ஹட்டனுக்கு அதிகாரம் வழங் கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களாக நடைபெற வுள்ள இந்த விசாரணைகள் குறித்து நீதிபதி ஹட்டன் கூறியதாவது:-

பி.பி.ஸி., ஈராக் போர் குறித்த சர்ச் சையைக் கிளப்பியது. ஆனால், அது கெலியின் பெயரை அதில் சம்பந்தப் படுத்தவில்லை. இவ்வாறிருக்கும் போது, ஏன் இந்த சர்ச்சைக்கு கார ணமானவர் என்று கெலியின் பெயர் உச்சரிக்கப்பட்டது. கெலியின் பெயரை முதலில் கூறியவர் யார் என்பதைக் கண்டுபிடித்து அவரிடம் விசார ணைகள் நடைபெறும். கெலியை பேட்டி கண்ட பி.பி.ஸி. நிருபர் கில்லிகன் மற் றும் அவரது உதவியாளர் ஆகியோரி டமும் விசாரணைகள் நடைபெறும். இது முதலாவது கட்டம்.

இரண்டாவது கட்டமாக கெலி தனது பேட்டியின்போது உண்மை யாக எதனைக் கூறியிருப்பார் என்ப தைக் கண்டுபிடிப்பதாக இருக்கும். ஏனெனில், பி.பி.ஸியின் ஒரு தரப்புக் கூற்றை வைத்து கெலி இதைத் தான் கூறியிருப்பார் என்பதை நம்ப முடியாது - என்றார்.

இந்த இரண்டு கட்டங்களின் போதும் பிரிட்டிஷ் பிரதமர் பிளயர் உட்பட பல்வேறு முக்கிய புள்ளிகளி டம் விசாரணைகள் நடைபெறலாம் என்று கூறப்படுகிறது.

லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மான் நினைவாக பலாலி வீதியில் அவர் வீரச்சாவடைந்த - தாக்குதல் நடைபெற்ற இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூபியை முதல் படத்திலும் நேற்று அங்கு நடந்த அஞ்சலி நிகழ்வில் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்படுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.



பலாலி வீதியில் லெப்டினன்ட் செல்லக்கிளியின் நினைவுக் கல் நிறுவப்பட்ட இடத்தில் நேற்று பொது மக்களுக்கும் படையினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டு அந்த வீதியில் போக்குவரத்து தடைப்பட்டிருந்த வேளை அங்கு எடுக்கப்பட்ட படங்கள் இவை.
*(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# நிர்வாகச் சேவைக்குத் தெரிவான அனைவருக்கும் நியாயமான காலப் பகுதிக்குள் நியமனங்கள்

## வழக்கு விசாரணையில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு,ஜூலை24

நிர்வாகச் சேவை பரீட்சை மூலம் அகில இலங்கை ரீதியாகவும், வடக்கு - கிழக்கிற்கென விசேடமாகவும் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நியாயமான காலப் பகுதிக்குள் நியமனங்கள் வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நிர்வாகசேவைப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நியமனங்கள் வழங்குவது தொடர்பான வழக்கு உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

நீதியரசர் எதுருசூரிய தலைமையில் அசோக டி சில்வா, நிஹால் ஜயசிங்க ஆகியோர் இந்த வழக்கை விசாரித்தனர்.

இலங்கை நிர்வாக சேவைக்கு அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பட்டவர்கள் நியமனத்திற்காகக் காத்திருக்கும் வேளையில் -

வடக்கு - கிழக்குக்கென விசேட பரீட்சை மூலம் நிர்வாகச் சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதை ஆட்சேபித்தே இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் தீர்ப்பில் நிர்வாக சேவைக்கு அகில இலங்கை ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நியமனங்கள் வழங்கிய பின் வடக்கு - கிழக்குக்கென விசேடமாகத் தெரிவானவர்களுக்கு நியமனங்கள் வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கில் ஆஜரான அரச சட்டத்தரணி ரஜிவ் குணதிலக நிர்வாக சேவைக்குத் தெரிவாகியுள்ள மேற்குறிப்பிட்ட இரு பிரிவினருக்கும் நியமனங்கள் வழங்க திறைசேரியும் பொது நிர்வாக ஆணைக்குழுவும் ஒப்புக்கொண்டுள்ளன - என்று தெரிவித்ததை அடுத்தே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

நிர்வாக சேவைக்கு வடக்கு - கிழக்குக்கென விசேடமாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பி.சிவலோகநாதன், சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (எ)

## ஜனாதிபதியின் உரை ரத்து

கொழும்பு,ஜூலை24

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று இரவு ரூபவாஹினி தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு ஆற்றவிருந்த உரை ரத்துச் செய்யப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்தது. வடக்கு - கிழக்கிற்கான உத்தேச இடைக்கால நிர்வாக சபை, இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக ஜனாதிபதி இந்த உரையை ஆற்றவிருந்தார்.

# லெப். செல்லக்கிளியின் நினைவுத் தூபி திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் 20ஆவது ஆண்டு நினைவாக அவர் வீரச்சாவடைந்த இடமான திருநெல்வேலி, தபாற்பெட்டிச் சந்திக்கு அருகில் நினைவுத் தூபி ஒன்று நேற்று திறந்துவைக்கப்பட்டது.

நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சிக்கு யாழ்.மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன் தலைமை வகித்தார்.

பொதுச் சுடரினை யாழ். - நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் க.சிவராஜா, தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த குகன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஸ் நினைவுத் தூபியை திரைநீக்கம் செய்துவைத்தார். நினைவுரையினை ஈஸ்வரன் நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து போராளிகள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையானோர் செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை -

செல்லக்கிளி அம்மானின் 20 ஆவது ஆண்டு நினைவு நாளை ஒட்டி நேற்றிரவு எழுச்சிக் கூட்டமும் கலை நிகழ்வுகளும் நல்லூர் சட்டநாதர் சிவன்கோயிலுக்கு அருகில் நடைபெற்றன.

(ஐ-4-86)

# கண்ணியில் சிக்கிய யானை நேற்று மரணம்

கிளிநொச்சி,ஜூலை24

ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதியில் கண்ணிவெடியில் சிக்கி காயமடைந்த யானை உயிரிழந்துள்ளது.

காலில் காயமடைந்த இந்த யானையை விடுதலைப் புலிகளின் வனவளப் பிரிவினர் மீட்டிருந்தனர். அதற்கு சிகிச்சை அளிக்க நிபுணர்களின் உதவியையும் கோரி இருந்தனர்.

அவர்களது கோரிக்கையை ஏற்று வனவளப் பாதுகாப்புத் திணைக்கள நிபுணர் குழுவினர் நேற்று அநுராதபுரம் வந்து சேர்ந்தனர்.

எனினும், அதற்கிடையில் யானை உயிரிழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அதனை அடுத்து அவர்கள் அநுராதபுரத்துடனேயே திரும்பிச் சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3)

# பொகவந்தலாவை தோட்ட காவலரணை உடனடியாக அகற்ற நடவடிக்கை

## மாணிக்கக்கல் அகழ்வை நிறுத்தவும் உறுதி

கொழும்பு,ஜூலை24

பொகவந்தலாவை செப்பல்டன் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பொலீஸ் காவலரண் உடனடியாக அகற்றப்படும். இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பதுளை மாவட்ட எம்.பியுமான கே.வேலாயுதம், உள்துறை அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் விடுத்த கூட்டுக் கோரிக்கையை அடுத்து, அரசியல் விவகார, கைத்தொழில் முதலீட்டுத் துறைகள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்படி தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் மாணிக்கக்கல் அகழ்வு வேலைகள் நிறுத்தப்படும் என உறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்றக் குழு அறையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூட்டங்களிலேயே இவ்விடயங்கள் எழுப்பப்பட்டுத் தீர்வுகள் காணப்பட்டன.

(எ)

## மாத்தளை பஸ் விபத்தில் 26 பயணிகள் காயம்!

மாத்தளை, கும்பியாங்கொடைப் பகுதியில் நேற்றுக்காலை ஏற்பட்ட ஒரு விபத்தில் 26 பயணிகள் காயமடைந்தனர்.

மாத்தளையிலிருந்து கொழும்புக்கு வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றும் கண்டியிலிருந்து திருகோணமலைக்கு சென்றுகொண்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றும் கும்பியாங்கொடையில் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இவ்விபத்து ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. (எ)

# மட்டக்களப்பு, அம்பாறையில் நேற்று மீண்டும் வழமை நிலை

ஆரையம்பதி,ஜூலை24

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று வழமையான நிலை நிலவியது. கடைகள், அலுவலகங்கள் திறக்கப்பட்டு பாடசாலைகள், போக்குவரத்துக்கள் என்பன தங்கு தடையின்றி இயங்கின.

இவ்விரு மாவட்டங்களிலும் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது தெரிந்ததே.

மக்களின் நடமாட்டம் வீதிகளில் அதிகமாக இருந்ததனால் போக்குவரத்துப் பொலீஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

மட்டக்களப்பு நகரில் உள்ள கடைகள் யாவும் திறந்திருந்தன. மக்கள் முண்டியடித்துக் கொண்டு பொருள்களையும் பத்திரிகைகளையும் வாங்குவதையும் காணமுடிந்தது. அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், பொலீஸ் நிலையம் என்பவற்றில் மக்கள் கூடுதலாகக் காணப்பட்டனர்.

அமிர்தகழியில் பிரசித்தி பெற்ற மாமாங்கேஸ்வரர் ஆலய உற்சவம் கடந்த 19.07.2003 சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரூ.2ஆயிரம் கோடி இழப்பு: சொக்ஸி நாளை அறிக்கை

வற் வரியாக 2ஆயிரம் கோடி ரூபா அறவிட முடியாமற்போனது குறித்து நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி நாளை நாடாளுமன்றத்தில் அறிக்கை விடுப்பார்.

வற் வரி 2ஆயிரம் கோடி ரூபா அறவிடப்படாமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் விஷேட அறிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து, அந்த விடயம் தொடர்பாக நிதியமைச்சர் நாளை நாடாளுமன்றத்தில் அறிக்கை விடுப்பார் என்று பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

# மூன்று மலையகச் சங்கங்கள் இன்று முதலாளிமார்களுடன் கூட்டு ஒப்பந்தம்

தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் மூன்று மலையக தொழிற்சங்கங்களும் இன்று கூட்டு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுகின்றன. ஆயினும், அந்த ஒப்பந்தத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்தோ, நட்டத்தில் இயங்கும் தோட்டங்களில் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலம் குறித்தோ, தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் 300 கோடி ரூபா ஊழியர் சேமலாப நிதி குறித்தோ எதுவும் குறிப்பிடப்படவில்லை எனத் தெரிகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி ஆகிய மூன்று தொழிற்சங்கங்களே இந்த கூட்டு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளவிருக்கின்றன.

இராஜகிரியவில் உள்ள தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்தில் சங்கப் பிரதிநிதிகள் நேற்று இறுதிச்சுற்றுப் பேச்சுக்களை நடத்தினர். மலையக மக்கள் முன்னணி இப்பேச்சுக்களுக்கு அழைக்கப்படவில்லை.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், கே.வேலாயுதம் எம்.பி., ஓ.ஏ. இராமையா ஆகியோர் மூன்று தொழிற்சங்கங்களின் சார்பிலும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கும், தோட்ட நிர்வாகங்களுக்கும் இடையில் சுமுகமான நிலையும் புரிந்துணர்வும் ஏற்படவேண்டும்; தோட்டத் தொழிலாளர்களது சம்பள விவகாரங்களில் முன்னேற்றகரமான மாற்றம் ஏற்படல் வேண்டும். தொழிற்பயிற்சிகளில் ஈடுபடும் வகையில் தோட்டமொன்றில் ஒரு தொழிற்சங்கத்தில் இருந்து இரண்டு பேர் வீதம் தெரிவுசெய்யப்பட்டு 5 நாள் பயிற்சிகளுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படல் வேண்டும், மரணமொன்றின் இறுதிக்கிரியைகளுக்கான செ[illegible]மாக 2 ஆயிரம் ரூபா வழங்[illegible] வேண்டும் என்ற விடயங்கள்[illegible] [illegible]த்தில் உள்ளடக்கப்பட்டிரு[illegible]

# கொழும்புத்துறை கிழக்குக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

அரியாலை,ஜூலை24

கொழும்புத்துறை கிழக்கு பிரதேச மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாநகரசபை மேற்கொண்டு வருகின்றது.

குடிதண்ணீரை விநியோகிக்கும் பொருட்டு ஸ்ரீசந்திர சேகரப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இருக்கும் குடிதண்ணீர் தாங்கி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றதும் இந்தப் பகுதி மக்களுக்கான, குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## பொதுக் கூட்டம

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை சேமநலவிருத்திச் சங்கம் மற்றும் பொழுதுபோக்குக்கழகம் ஆகியவற்றின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 10மணிக்கு யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-6)

## நல்லூர் உற்சவம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை24

எதிர்வரும் 3 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ. இராமலிங்கம் தலைமையில் மாநகர சபை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மஹோற்சவகால ஏற்பாடுகளுடன் தொடர்புடைய சகல தரப்பினரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-10)


**யாழ்.பல்கலைக்கழக**
**3 ஆம் வருட பொதுக்கலை மாணவர்களுக்கான**
**அறிவித்தல**

விடயம்: குழுப் படத்திற்கு பதிவுசெய்தோர் குழுப் படத்தினைப் பெற்றுக்கொள்ளல்.
காலம்: 24-07-2003, 25-07-2003
நேரம்: முற்பகல் 10.00 - 12.00 வரை
இடம்: A.S.U. காரியாலயம்
(20633)(21-12-15) – கலைப்பீட மாணவர் ஒன்றியம்.



**வடமராட்சியில் ஆங்கில ஆசிரியர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் தேவை**

வடமராட்சியில் ஆரம்பமாகவிருக்கும் ஆங்கிலமொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு பாலர் பாடசாலைக்கும், சிறார்களுக்கான ஆங்கில வகுப்புக்களை நடத்துவதற்கும் ஆசிரியர்கள் தேவை. பாலர் பாடசாலையில் கற்பிப்பதற்கு ஓரளவுக்கு ஆங்கில மொழியில் தேர்ச்சியுள்ள இளம் பெண்களும் விண்ணப்பிக்கலாம். அலுவலகத்தில் வேலைபார்க்கக் கூடிய பெண்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோரும் ஏற்கனவே 21ஜூலை உதயன் விளம்பரத்துக்கு விண்ணப்பித்தோரும் சனிக்கிழமை 26ஜூலை 2003 அன்று 10.00 - 4.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் கீழ்வரும் முகவரிக்கு நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கவும்.

**British Business School,**
No.140, Temple Road, Jaffna.
(20641) (21-25-19-12)



**பணியாளர் தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு கல்வியறிவுள்ள பணியாளர் (ஆண்/பெண் இருபாலாரும்) தேவை. உடனே நேரில் வரவும்.

**மக்மிலன் புத்தகசாலை**
03. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
(20628) (21-25-12-19)



**20%-25% தள்ளுபடி**

**COSMO**
**டீசல் ஜெனரேட்டர்ஸ்**

- 5 வர்க்கங்கள்
- 1.8KW முதல் 10KW வரை
- சப்தமற்ற வர்க்கங்கள்
- மின்சாரத்தினால் அல்லது கைகளினால் இயக்கக்கூடியவை
- எண்ணெய் குறையும் நிலையில் தானாகவே இயக்கத்தை நிறுத்திக்கொள்பவை




Access Graphics

மேலும் விபரங்களுக்கு
**சென்ட். அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட் II**
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி: 337286, 337283-5, 324261-5



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரும், சென்ற்: ஜேம்ஸ் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், சென்ற். ஜேம்ஸ் ஐக்கிய நாணய சங்கத் தலைவரும், பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளரும், பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஓய்வுபெற்ற பிரதம லிகிதரும், புனித யாகப்பர் ஆலய பங்குச் சபை முன்னாள் செயலாளரும், புனித யாகப்பா ஆலய இருதய சபையின் மூத்த உறுப்பினருமான

**உயர்திரு. கிறிஸ்தோப்பர் எட்வேட் பங்கிராஸ்**

அவர்கள் 23.07.2003 இல் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதிபதி திரு. பா. சுப்பிரமணியம் அவர்களது முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டமையையிட்டு அவரை நாங்கள் அனைவரும் மனமுவந்து மகிழ்ச்சியோடு பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது பணி மேலும் நன்கு சிறக்க இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு. –பரமானந்தம் குடும்பத்தினர்.
(20632) (21-12-15-25)



**நிபுணத்துவ வைத்திய சேவை**

**மாற்று மருத்துவத்தில் மறுமலர்ச்சி!**
லண்டன் பிரபல சர்வதேச மாற்று மருத்துவ நிபுணர் பேராசிரியர், டாக்டர் மருது கந்தப்பு PhD அவர்களின

**CNT/SMAT/OSTEOPATHY வைத்தியம்**

CNT - மூளை நரம்பு நுண்செயல் சிகிச்சை
SMAT - எலும்பு, தசை அதிர்வு சிகிச்சை
OSTEOPATHY - எலும்பு மூட்டுகள் சம்பந்தமான சிகிச்சை யாவும் மருந்துகளற்ற சிகிச்சை முறை; சகல நோய்களுக்கும் நிவாரணமளிக்கும்.

இடம்: பிலிப் நேர்ஸிங் ஹோம்,
228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: இன்று 24ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 2ஆம் திகதி காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை.

முன் பதிவுகளுக்கான தொலைபேசி இல. 222 5051, 077 6005425

முன்பதிவு செய்தல் மிக முக்கியம்
(20636) (21-12-15-27)



**JAFFNA CELLULAR & REPAIR CENTER**

AUTHORISED DEALER DIALOG GSM &
MOBITEL METROPOLITAN TELECOM
SERVICE (PVT) LTD.



எமது நிறுவனத்தினால் - குறித்த நேரத்தில் சகலவிதமான கையடக்கத் தொலைபேசிகளும் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

**டயலொக், மொபிட்டல் இணைப்புக்களும் பெற்றுக்கொள்ளலாம்**

மேலதிக விவரங்களுக்கு விஜயஞ்செய்யுங்கள்.

**யாழ்.செலுலர் றிப்பேயர் சென்ரர்**
இல.151/1/4, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான பஸ் நிலையம் முன் விமாகி கட்டட 1ஆம் மாடியில்
0777-738888, 0777 - 758805,
0712 - 361967, 0777 - 209175.

kit Mobitel

மொபிட்டல் தொலைபேசி வைத்திருப்பவர்களுக்கு இணைப்பு மட்டும் பெற்றுக் கொடுக்கப்படும்.
(20643) (21-26-12-19)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் (வீட்டுக்கிருத்திய அழைப்பும்)

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 23 | 25 |
| - | - |
| 05 | 06 |
| - | - |
| 1917 | 2003 |



அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட

**அமரர் நாகலிங்கம் குணரட்ணம்**

(இளைப்பாறிய ஆசிரியர்)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
எமைவிட்டு நீங்கள் எங்கு சென்றீர்கள்?
என்றும் உங்கள் நினைவலைகள்
எம் நெஞ்சில் நிதமும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியம் நாளை (25-07-2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

15, அருளம்பலம் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்.
(20639) (21-12-15-27)

## நெஞ்சகலாத நினைவஞ்சலி

20ஆம் ஆண்டு



**அமரர் எஸ்.சரவணமுத்து**
B.A.(லண்டன்)
(இளைப்பாறிய ஆசிரியர்)
பிறப்பு:- 19-04-1901
இறப்பு:- 24-07-1983



**அமரர் சு. கலாபரமேஸ்வரன்**
M.A.(முன்னாள் திட்டமிடல் அதிகாரி)
02-08-1944
24-07-1983

7ஆம் ஆண்டு



**அமரர் தி.சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர், புத்தூர்).
23-03-1906
06-05-1996

ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவு மாறவே மாறாது!

தங்களை நினைவு கூரும்:
சு.தி.சிவலோகநாதன் (J.P.)
"இலட்சுமிபதி"
526, பலாலி றோட், திருநெல்வேலி.

குடும்பத்தினர்.
சுன்னாகம் றோட், புத்தூர்.
(20639)(21-12-15)

உதயன்

# தமிழ் மக்கள் உணர்வை பிரதிபலித்த சம்பவங்கள்

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் இரண்டு சம்பவங்கள் நேற்றுமுன்தினம் வடக்கு - கிழக்கில் நடந்தேறியிருக்கின்றன.

முதல் சம்பவம் - கிழக்கு மக்களின் உணர்வை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்த ஹர்த்தாலினால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் ஸ்தம்பிதம் அடைந்தமை.

மற்றைய சம்பவம் - யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்வு ஒன்றுக்கு வந்திருந்த அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன பல்கலைக்கழகத்துக்குள் நுழைய முடியாதபடி தடுத்து நிறுத்தித் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டமை.

கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கெடுபிடி, புலி ஆதரவாளர் கொலை ஆகியவற்றைக் கண்டித்தும், கறுப்பு ஜூலை கொடூரத்தை வெளிப்படுத்தும் விதத்திலும், கைதுசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை விடுவிக்கக் கோரியும் அங்கு இரண்டு நாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் முற்றாகச் செயலிழந்தன.

கிழக்கில் தமிழ்ப் பிரதேசங்களில் மட்டுமல்லாமல் முஸ்லிம் பிரதேசங்களிலும் இந்த ஹர்த்தால் வெற்றிகரமாக நடந்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சம்.

தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கும் பொது விடயங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமைப்பட்டு அதற்கு முகங்கொடுப்பர் என்பதை மீண்டும் ஒரு தடவை நிருபிக்கும் உணர்வு வெளிப்பாட்டுச் செயற்பாடாக இந்த ஹர்த்தாலை கருதமுடியும். அந்தவகையில் இந்நிகழ்வின் வெற்றி தமிழர் - முஸ்லிம்கள் ஆகிய இருதரப்பினரும் பெருமிதத்தோடு உரிமை பாராட்டக் கூடியதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றிலில் நடந்த சம்பவத்தை இலங்கை அரசின் தனி ஓர் அமைச்சருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு சம்பவமாகக் கொள்ளமுடியாது.

இலங்கை அரசின் பேரினவாதப் போக்குப் பிரமுகர்கள் இடையே இனவாதப் போக்கு இல்லாத - தமிழர்களையும் தமது சகோதரர்களாக மதிக்கும் - ஒரு சில தலைவர்களுள் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவும் ஒருவர்.

ஜனாதிபதி சந்திரிகாவின் போர்வெறி அரசு, ஈழத் தமிழர்கள் மீது பெரும் போரைக் கட்டவிழ்த்துவிட்ட காலத்தில், போரில் சிக்கிச் சிதறுண்டு கிடந்த நமது வன்னி மக்களின் துயர் துடைக்க மனங்கொண்ட பெரும்பான்மை இனப்பிரமுகர்கள் ஓரிருவரில் - அப்போது எதிர்க்கட்சியில் இருந்த - அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவும் ஒருவர். அத்தகைய ஒருவருக்கு, எதிராகத் தனிப்பட்ட முறையில் யாழ். மக்களுக்கோ மாணவர்களுக்கோ காழ்ப்புணர்வு இருப்பதாகக் கருத வேண்டியதில்லை.

எனவே, தனிப்பட்ட முறையில் அவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அல்ல யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் அவர் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம்.

"அதி' உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பல பாடசாலைகள் மூடிக்கிடக்கின்றன; சில பாடசாலைகளில் இன்னும் படையினர் நிலைகொண்டுள்ளனர். ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த கல்லூரி, யூனியன் கல்லூரி போன்றவற்றுக்கு மாணவர்கள் சுதந்திரமாகச் சென்றுவர முடியவில்லை. இது விடயத்தில் -- புரிந்துணர்வு ஒப்பந்தப்படிதான் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளை - அரசுத் தரப்பு நிறைவேற்றாமல் உதாசீனம் செய்துவருகின்றது. இந்த நிலையில், பாடசாலைகளைப் புனரமைத்ததாகக் காட்டி, ஆடம்பர விழாக்களை நடத்தி, ஆரவாரம் செய்து, பிரசாரம் பண்ணுவதா?" - என்று கேள்வி எழுப்பியே மாணவர்கள் இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இது அரசின் செயற்றிறனின்மைக்கு - தமிழர் விரோதப் போக்குக்கு - சர்வதேச உலகை ஏமாற்றும் பொய்ப்பிரசார நாடகப் பாணிக்கு - எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடே.

அமைச்சர் ஜயலத்தை அவமதித்த, அல்லது அவமரியாதை செய்த நிகழ்வாக இதைக் கருதாது, அமைதி முயற்சிகளுக்கு நடுவே குறுகிய அரசியல் லாபம் தேடும் அரசுத் தரப்பின் போக்குக்குக் கொடுக்கப்பட்ட ஓர் அடியாகவே இதனைக் கொள்ள வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளை, ஈழத் தமிழரின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு தெறிப்பாகவே சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நாவாந்துறை, கொட்டடிப் பகுதிகளில்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 130 வீடுகளைப் புனரமைக்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை24

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் யாழ்.மாவட்ட 'நிக்கொட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் நாவாந்துறை மற்றும் கொட்டடிப் பகுதிகளில் உள்ள 130 வீடுகள் புனரமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வீடுகளும் தலா ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. இந்தச் செயற்பாட்டுத் திட்டத்தின் ஆரம்பவிழா கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கழகத்தின் மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதான சுடரை நாவாந்துறை பங்குத் தந்தை பீற்றர் துரைரத்தினம் ஏற்றிவைக்க யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் விளம்பரப் பலகையை திரைநீக்கம் செய்துவைத்தார். அதனைத் தொடர்ந்து வீடுகளுக்கான ஆரம்ப கட்டுமானப் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கனிமொழி, புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இனியவன், நல்லாயன் கன்னியர்மடத் தலைவி சகாயமேரி, நிக்கொட் பணிப்பாளர் வே.சாம்பசிவம், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ம-10)

## நாட்டு நடப்பு

### காதலிக்கு எழுதிய கடிதம்

கூட்டியே மாதர் தம்மை
குதூகலமாகப் பேசி
நாட்டிலே தமிழர் பண்பு
நலிந்து நாளும் என்பாய்

வெள்ளையர் நாகரிகம் தந்த
வெறுப்பான நடைஉடைகள் தம்மை
பண்டைய தமிழர் வாழ்வில்
பார்த்ததும் உண்டோ என்பாய்?

கற்பெனப் படுவதொன்று
கன்னியர்க்கு மட்டும் தானோ?
பற்பல பெண்களை நாடி
பலபகல் இரவு போக்கும்
பித்தர்க்கும் 'கற்பு' வேண்டுமென்று
பேதலித்து எடுத்துரைப்பாய்

உத்தமி உன் போன்றவரால்
உயர்ந்தது எங்கள் சாதி
வித்தகி உனைத் துணையாய்க் கொள்ள
விரும்பினேன் பதில் விளம்புவாயே!
*அன்புள்ள காதலன் முல்லை வளவன்.*

- விகடகவி.

வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் இருந்து

# தமிழ்த்தின விழாவில் கலந்துகொள்ள 2,500 மாணவர்கள் இன்று வருவார்கள்

முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழித் தினப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கென ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 500 மாணவர்கள் இன்று குடாநாட்டுக்கு வருகைதரவுள்ளனர்.

நாளைமறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ள இப்போட்டிகளில் 8 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள இப்போட்டிகளை நடத்துவதற்காக மாகாணக் கல்வித்திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

ஏனைய மாவட்ட மாணவர்கள் தங்குவதற்காக 20 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போட்டிகள் யாவும் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துமகளிர் கல்லூரி மற்றும் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

மாகாண தமிழ்மொழித்தின விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

தமிழ்மொழித்தினப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கலும் 'கவின்தமிழ்' மலர் வெளியீடும் இந்நிகழ்வில் இடம்பெறும்.

வடக்கு - கிழக்கு மாகாண நாட்டுக்கூத்துவிழா எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தலைமையில் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

நாட்டுக்கூத்துப் போட்டிகளில் முதலிடங்களைப் பெற்ற நாட்டுக் கூத்துகளும் மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளும் இதில் இடம்பெறவுள்ளன.

(ம-10-ரி)

# கரையோரத்தில் சேதமடைந்த வீடுகளின் விவரங்கள் திரட்டு

## இந்து கலாசார அமைச்சு நடவடிக்கை

வலி.வடக்கு,ஜூலை24

2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் குடாநாட்டின் கடற்கரையோரப் பிரதேசங்களில் சேதமடைந்த வீடுகள் தொடர்பான விவரங்களை இந்து கலாசார அமைச்சு சேகரிக்க ஆரம்பித்துள்ளது.

சேதமடைந்த வீடுகளின் விவரங்களைத் தருமாறு பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர்கள், அமைச்சினால் கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கடற்கரைப் பிரதேசங்களை அண்டிய அதிகளவான பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கின்றது. இப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியமரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும், இப்பிரதேசங்களிலும் சேதமடைந்த வீடுகளின் விவரங்களை கிராம அலுவலர்கள் திரட்டிவருகின்றனர்.

என்ன தேவைக்காக இந்த விவரம் திரட்டப்படுகின்றது என்று இந்து கலாசார அமைச்சு தெரிவிக்கவில்லை.

(ம-86)

# மோட்டார் சைக்கிள் திருடிய நபருக்கு ஒத்திவைத்த சிறை

மோட்டார் சைக்கிள் திருடியமை மற்றும் அதன் உடைமைகளைத் தனது பெயருக்கு மாற்றியமை என்பன தொடர்பாகக் குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைத்த ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

யாழ்ப்பாணம், சினிவாசகர் வீதியைச் சேர்ந்த தியாகராசா - குகதாசன் என்பவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றைத் திருடியமை மற்றும் அதன் உடைமைகளைத் தனது பெயருக்கு மாற்றியமை என்பன இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளாகும்.

இதுதொடர்பான விசாரணை நேற்று யாழ். நீதிமன்றத்தில் இடம்பெற்றபோது குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைத்த ஒரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார்.

(ம-5)

# மனித உரிமை மீறல்களை தடுக்க அனைவரும் முன்வரவேண்டும்!

## ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துவருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் என். செல்வகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று மாலை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது:-

யாழ்மாவட்ட மனித உரிமைகள் ஆணைகுழுவின் செயற்பாடுகளை மேலும் அதிகரிக்க வேண்டும். தற்போது யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் கிடைக்கும் முறைப்பாடுகளில் இருந்து மனித உரிமை தொடர்பான பிரச்சினைகளை அறிய முடிகின்றது.

இதனைத் தடுத்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது மிக முக்கியமானது - என்றார்.

இதேவேளை, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:-

இராணுவத்தினர் பொதுமக்களின் வாழ்விடங்களை உயர் பாதுகாப்பு வலயம் என்று சொல்லி மக்களை மீளக்குடியமரவிடாமல் தடுத்து வருகின்றனர்.

96 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்காப் படையினரால் அப்பாவிப் பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனதற்கு இதுவரை எந்தவித உரிய நடவடிக்கைகளும் எவராலும் எடுக்கப்படவில்லை.

இவர்கள் தொடர்பான உரிய பதில்களை தரும்படி காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் தொடர்ந்து போராடி வருகின்றது. - என்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்மனித உரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரி ருவான் சந்திரசேகரா, மற்றும் வணபிதா - பேர்னாட் அடிகள், 'கியூடெக்' இயக்குநர் வணபிதா ஜெயக்குமார், மகளிர் அபிவிருத்தி நிலையத்தலைவி - சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ம-ரி)

### நாளை

ஆடி 9
வெள்ளிக்கிழமை
(25.07.2003)
திதி : ஏகாதசி
முற்பகல் 9.25 வரை.
நட்சத்திரம : ரோகிணி
பிற்பகல் 4.39
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 6.02 - 7.32
ராகுகாலம் : 10.32- 12.02
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

மனத்தூய்மை உடையவர்கள் முழு மகிழ்ச்சியுடன் தங்கள் கடமைகளைச் செய்வார்கள்.

# இடைக்கால நிர்வாகம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம்

## தேவை என்கிறார் மஹிந்த

அரசு விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியுள்ள இடைக்கால நிர்வாக கட்டமைப்பு வரைவு குறித்து நாடாளுமன்றத்தில் இருநாள்கள் விவாதம் நடத்தவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக்கட்டமைப்புத் தொடர்பாக பிரதமரும், சிரேஷ்ட அமைச்சர்களும் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என்றும் -

ஊடகங்கள் வேறு விதமாகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன என்றும் - அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, கட்டமைப்பின் உண்மையான விடயங்களை மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் இருநாள்கள் விவாதம் நடத்த வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.(ஒ-3-5)

## பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த

# இளைஞர், யுவதிகளுக்கான தொழில் திறன் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை24

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்துகொண்ட இளைஞர் மற்றும் யுவதிகளுக்கான ஒருநாள் தொழிற் பயிற்சி செயலமர்வொன்றை சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்துடன் ஜிரி.இசற் நிறுவனம் இணைத்து நடத்தவுள்ளது.

இந்த ஒருநாள் செயலமர்வு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பயிற்சி மண்டபத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணிமுதல நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் முயற்சியாண்மை, பொருத்தமான தொழில் தெரிவு, திறன் விருத்தி மற்றும் தற்போதைய நிலை தொடர்பாக கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

இச்செயலமர்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், சி.ஈ.எவ்.ஈ., தொழில் அபிவிருத்திச் சபை மற்றும தொழில் திணைக்களப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச்செயலமர்வில் கலந்துகொள்ள விரும்பும் ஆர்வலர்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக மூளாயில் உள்ள சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3-9)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



24-07-2003

**பவஷாயினி**

திரு.திருமதி

சிறிஸ்கந்தராஜா-அருள்வாணி

(உடுப்பிட்டி) (வேலணை)

தம்பதிகளின் செல்வப்புதல்வியை இன்று அவரது பிறந்த நாளில் வேலணை பெருங்குளத்து ஸ்ரீ முத்துமாரியம்மனின் அருள் ஆசி வேண்டி பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்தும்:

பெரியப்பா, பெரியம்மா,

அண்ணாமார்:

தசாகன், தசானுசன்.

107/3, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.
(20542)(21-15-19)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



கைதடி மத்தி வளர்மதி வீதியைச் சேர்ந்த

திரு.திருமதி

பாலசுப்பிரமணியம் - ரதி

தம்பதிகளின் செல்வப் புதல்வன்

செல்வன்

**ஜனிஸ்டன்**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (24.07.2003) வியாழன் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அண்ணாமார் ரகுமான், புதுவைவேந்தன் மற்றும் பிரான்ஸில் வசிக்கும் பெரியப்பா வா.செல்வக்கண்டு, அண்ணா அகிலன், கைதடியில் வசிக்கும் கபிலன் அண்ணா, கஜந்தன் அண்ணா, அக்காமார்களான அனு, ஜெனா, பாவுக்குட்டி, பெரியம்மாமார்களான சரஸ்வதி, மீனா, மாமாமார், அத்தைமார், சித்தி குடும்பம், சுன்னாகம் மயிலணி செல்வம் மாமா குடும்பம், றமேஸ் அண்ணா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

அன்புடன் :

பாலசுப்பிரமணியம் ரதி குடும்பம்

(தந்தை, தாய்)

வளர்மதி வீதி,
கைதடி மத்தி, கைதடி. (20605)(21-15-19)



## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணப் பகுதிகளில் அழுக்ககற்றி (DETERGENT), கிருமிகொல்லிகளை (DISINFECTANT), சந்தைப்படுத்த அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி ஒருவர் மிகவும் பிரபல்யம்வாய்ந்த கம்பனிக்குத் தேவைப்படுகின்றார்.

உடனடி நேர்முகப் பரீட்சை

***(Walk In Interview)***

நேரம் : மு.ப. 9.30 முதல் பி.ப. 2:00 மணிவரை
காலம் : 25.07.2003
இடம் : ஜெகன் பார்மஸி,
பல்பொருள் விற்பனை நிலையம்,
642 B, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

(சி-29100) (21-19-15)


# ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர்களை இப்போதைக்குத் திருப்பி அனுப்பாதீர்கள்!

## அந்நாட்டு அமைச்சரிடம் தமிழ் எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு,ஜூலை24

போர் ஓய்ந்துவிட்டதால் நிலையான சமாதானம் ஏற்பட்டுவிட்டது என்று நம்பி, புலம்பெயர்ந்த தமிழ் மக்களை இப்போதைக்கு இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவிடாதீர்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள், ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சரும் சமாதான விவகாரங்களில் அந்நாட்டுப் பிரதமருக்கு உதவும் அமைச்சருமான பிலிப்றுடொக்கிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, தங்கவடிவேல், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் ஆஸ்திரேலிய அமைச்சரை கொழும்பில் உள்ள ஆஸ்திரேலியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் காலை சந்தித்து ஒரு மணி நேரம் பேசினர்.

யுத்தம் ஓய்ந்தும், புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து சுமார் 17 மாதங்களாகியும், ஆறுசுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் நடந்தும் இன்னும் நிலைமை சீராகவில்லை. இயல்புநிலை திரும்பவில்லை. இடம்பெயர்ந்து உள்நாட்டிலேயே அகதிகளாக இருககும் மக்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குச் சென்று குடியமர முடியாமல் கஷ்டங்களை அனுபவித்துவருகிறார்கள்.

இந்தநிலையில், புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் இருப்பவர்களை இங்கு திருப்பி அனுப்பிவிட்டால் அவர்கள் எங்கே போய் இருப்பார்கள், என்ன செய்வார்கள் என்று எம்.பிக்கள் கவலை தெரிவித்தனர்.

ஏன் சமாதானப் பேச்சுக்களில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா என்று ஆஸ்திரேலிய அமைச்சர் எம்.பிக்களைக் கேட்டார்.

தமக்குப் பெரிய அளவில் நம்பிக்கை இல்லை என்று எம்.பிக்கள் தெரிவித்தனர். விடுதலைப் புலிகளின கோரிக்கையை ஏற்று அரசாங்கம், வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் அமைக்க முன்வந்திருக்கிறதே, பின்பு என்ன என்று அமைச்சர் கேட்டார்.

அரசாங்கம் வழங்க உத்தேசித்திருக்கும இடைக்கால நிர்வாகக் கவுன்ஸிலில் உள்ள குறைபாடுகளை எம்.பிக்கள் சுட்டிக்காட்டினர். இந்தக் கவுன்ஸிலுக்கு முக்கியமாக காணிகள மீது எந்த அதிகாரமும் கிடையாது. காணிப் பிரச்சினை தமிழ் மக்களின் 50 வருட காலப் பிரச்சினை. காணி அதிகாரம் இல்லாமல் தாயகப் பூமியை பேணிப் பாதுகாப்பதும் இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்துவதும் எப்படி?

காணி அதிகாரம் மட்டுமா, வரி அறவிடும் அதிகாரமும் இந்தக் கவுன்ஸிலுக்குக் கிடையாது. பொலீஸ் நிர்வாகம், பாதுகாப்புப் பொறுப்புகள் கூட கவுன்ஸிலுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த இடைக்கால நிர்வாகக் கவுன்ஸில் திட்டத்தை இல்லை - தற்காலிக இடைக்கால நிர்வாகத் திட்டத்தை - விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டு மீண்டும் அரசுடன் பேச்சுகளுக்குச் செல்வார்களா என்பது கேள்விக்குறி.

இவற்றைக் கருத்திற்கொண்டு ஆஸ்திரேலிய அரசு புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் விடயத்தில் மனிதாபிமானத்துடனும் நிதானத்துடனும் நடந்து கொள்ள் வேண்டும். நிலையான சமாதானம் ஏற்படும் வரை அவர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது என்று எம்.பிக்கள் மீண்டும் அமைச்சரைக் கேட்டுக் கொண்டனர்.

## காவலரணில் மோதிய பஸ்

தெல்லிப்பழை,ஜூலை24

தனியார் மினிபஸ் ஒன்றைக் கடந்து செல்ல முயன்ற வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் இராணுவ காவலரணில் மோதி சேதமடைந்த சம்பவம் கடந்த திங்களன்று பலாலி வீதி கூழாவடியில் இடம்பெற்றது.

இடங்கொடாது முன்சென்ற தனியார் பஸ்ஸைக் கடந்துசெல்ல முற்பட்ட வேளையே குறித்த பஸ் எதிரே இருந்த இராணுவ காவலரணில் மோதியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் பஸ்ஸின் முன் கண்ணாடி முற்றாகச் சேதமடைந்த போதும் பயணிகள் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

(ம-150)

## வவுனியா நீதிவானின் அறிவுறுத்தல்

வவுனியா,ஜூலை24

குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்படும் நபர்களினை பொலீஸார் 24மணி நேரத்துக்குள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்று வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் வவுனியா காவல் துறையின் பல்வேறு மட்டத்தினிரையும் சந்தித்துக் கலந்துரையாடும்போது அறிவுறுத்தியுள்ளார்.

பிரதேசங்களில் இடம்பெறும் குறற்செயல்கள் தொடர்பாக பொலீஸாருக்குத் தகவல் கிடைத்தவுடன் நீதிமன்றுக்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

குற்றம் பற்றிய தகவல்கள் கிடைத்து அவர்கள் தொடர்பான நடவடிக்கையினை பொலீஸார் எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கப்படாது அவர்களுக்குத் துணைபோகும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்து உள்ளார்.

மேலும்,வவுனியா மாவட்டம் ஏனைய மாவட்டங்களினை விடவும் வித்தியாசமான நிலையினைக் கொண்டது என்று பொலீஸார் சிறப்பாக பணியாற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (164-3)


## தேவை

தையல் வேலை தெரிந்த ஆண்கள் தேவை.

**குமார் தையல் அகம்**

K.K.S. றோட், தாவடி,
கொக்குவில்.
T.P. 0777-111486

(20624) (21-15-19)


# வறுமையை முற்றாக ஒழிப்பதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை

## சார்க் பிரதிநிதிகள் மாநாட்டில் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க உரை

இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்கள் 1940 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையில் உள்ளன. இலவசமாக அரிசி, உப உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இந்த நடைமுறை 1980ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டு வறுமை ஒழிப்புக்கான ஜனசவிய திட்டம் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் இத்திட்டம் சமுர்த்தி வறுமை ஒழிப்பு முறையென மாற்றம் செய்யப்பட்டு தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வறுமையை முற்றாக ஒழிப்பதில் அரசாங்கம் தீவிர நாட்டம் கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கலதாரி ஹோட்டலில் சார்க் நாடுகளின் சமூக அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு மாநாட்டின் அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, பூட்டான், நேபாளம் முதலான சார்க் நாடுகளின் பிரதிநிதிகளும், அமைச்சுக்களின் செயலாளர்களும் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்ட இந்த வைபவத்தில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகங்க்ள்வரை இலங்கையில் இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. பாடப் புத்தகங்கள், பாடசாலை சீருடைத் துணிகள், மருத்துவ வசதிகள் முதலானவையும் இலவசமாகவே தொடர்ந்தும் வழங்கப்படுகின்றன.

இதுபோன்ற நடவடிக்கைகளைக் கண்டறிந்து நடைமுறைப்படுத்தி வறுமையை ஒழிப்பதற்கு சார்க் நாடுகள் இணைந்து செயற்படவேண்டும். அதனவாயிலாக வறுமை ஒழிப்புத்திட்டத்தினை நாம் வெற்றிகரமாக அமுல் நடத்தலாம்.

விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டங்களை அரசு மேற்கொள்கிறது. இலவசக் காணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. உரமானியங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் முதலானவையும் சமூக அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வறுமையை ஒழித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முயற்சிகளில் இலங்கை முன்னின்று செயற்படுகிறது.

- இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சமுர்த்திப் பணிப்பாளர் குமாரி நவரத்ன வரவேற்புரை நிகழ்த்தினார். கண்டிய நடனத்துடன் சார்க் நாடுகளின் பிரதிநிதிகள் வரவேற்கப்பட்டனர். (ம)

## 'வற' வரி அறவிடாதது தொடர்பாக விசாரணை

'வற்'வரி அறவிடத் தவறியமை தொடர்பாக உடனடி விசாரணை நடத்த அரசு தீர்மானித்துள்ளது. பொது மக்களும் சிறிய நிறுவனங்களும் 'வற்' வரியை உரியமுறையில் செலுத்தியுள்ள போதிலும் சில நிறுவனங்களிடமிருந்து உள்நாட்டு இறைவரி திணைக்களம் இந்த வரியை அறவிடுவதற்கு தவறியுள்ளது. இதனால் அரசுக்கு 2000 கோடி ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. வற்வரி சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது இதுபற்றி தெரியவந்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. (ம)


## 31ஆம் நாள் நினைவலைகள்

தாயின் மடியில்
17 - 10 - 1942



ஆண்டவன் அடியில்
24 - 06 - 2003

**அமரர் அந்தோனிப்பிள்ளை றேக்கு**

(கலைஞான சேகரி)

*பண்புக்கோர் இருப்பிடமாய்*
*ஆதரிப்பில் தெய்வமாய்*
*இல்லத்தில் ஒளிவிளக்காய்*
*திகழ்ந்த எம் தெய்வமே!*

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (24-07-2003) வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

செம்பியன்பற்று வடக்கு,
செம்பியன்பற்று.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(20552) (21-15-19)

# பேரினவாத வாக்கு வங்கியை ஜே.வி.பி. தக்க வைத்துக்கொள்ள விடக்கூடாது!

## கூட்டணி அமைக்க ஸ்ரீல.சு.க. அவசரம் காட்டுவது அதனால்தானா?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்குமிடையே பல இழுபறிகளுக்கூடாக ஒரு கூட்டு ஒப்பந்தம் எப்படியோ ஒப்பமிடும் கட்டத்தை அடைந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பியுடன் புதிய முன்னணியை அமைப்பதற்கு சுதந்திரக்கட்சியின் புத்திஜீவிகள் மட்டத்தினர் காட்டிவரும் ஆவல் ஜே.வி.பி. கொண்டிருக்கும் ஆர்வத்தை விடவும் அதிகமானது.

இதன் பின்னணியிலிருக்கக் கூடியவை சாதாரண தேர்தல் அனுகூலங்களை மட்டும் கருத்தில் கொண்டவையாக அன்றி சிங்கள இனத்திற்கு நிரந்தர அனுகூலங்களை வழங்கும் திட்டங்களாக இருக்கக்கூடும்.

உடனடியாக ஏற்படக்கூடிய அனுகூலம் என்றால் ஐ.தே.முன்னணியிடமிருந்து ஆட்சியை பிடுங்கி எடுப்பதற்கு அது அனுகூலமாக அமையும் என்பதாகும்.

ஆனால், ஜே.வி.பியை இணைத்துக்கொண்டதும் திடீரெனவே தேவையான ஒரு பெரும்பான்மை கிடைத்துவிடப்போவதில்லை.

தேர்தல் ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் விகிதாசார முறையில் இரு கட்சிகளும் ஒரு கூட்டணியாக ஒரே சின்னத்தில் போட்டியிடும் நிலையில் சிறு அனுகூலம் இருக்கலாம்.

அதாவது, ஒரு சில எம்பிக்களைக் கூடுதலாகப் பெறும் வாய்ப்பு ஏற்படலாம் என்று கணக்குப் போடுகிறார்கள். சுதந்திரக் கட்சியை பொறுத்தவரையில் இது முக்கியமாகவே இருக்கும்.

ஆனால், அந்த அணியினர் காட்டும் அசுர அவசரம் இதற்காகத்தானா?

ஐ.தே.முக்கு எதிரான சக்திகளை ஓரணியில் திரட்டுவதுடன் தம்மை முற்போக்குவாதிகளாகக் காட்டிக் கொள்வதன்மூலம் வாக்குகள் மட்டத்தில் ஓரளவான அனுகூலத்தைப் பெறமுடியும் என்று நினைக்கிறார்கள்.

சீனா, ரஷ்யா போன்ற வல்லரசுகளுடன் செல்வாக்காக இருந்து கொள்ளலாம் என்று கருதப்படுவதும் உண்மையே. ஆனால், முயற்சிகளின் தீவிரம் இவற்றிற்கு அப்பாலும் சில விடயங்கள் குறிவைக்கப்பட்டிருப்பதைக் காட்டுகின்றது.

சிங்களப் பேரினவாத அடித்தளத்திற்கு ஜே.வி.பி.சொந்தம் கொண்டாடுவதை பொ.ஐ.மு.சகித்துக் கொள்ளுமா?

பாரம்பரியமாக தான் பயன்படுத்திய ஆயுதத்தை ஜே.வி.பியின் கையில் விட்டுவிட்டு பின்னர் எப்படி அரசியல் நடத்துவது?

### கால இடைவெளி

இது விடயத்தில் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியை அனுமதித்தால் ஜே.வி.பி.தனியாகவே ஆட்சியமைக்கும் நிலைக்கு வளர்ந்து விட்டால் என்ன செய்வது?

விவசாயிகளிடமும், தொழிலாளர்களிடமும் ஏற்கனவே கணிசமான அடித்தளத்தை ஜே.வி.பி.வைத்திருக்கின்றது. அதன் கையில் சிங்கள இனத்தின் நாணயக் கயிற்றையும் கொடுத்தால் அது நிரந்தரமாகவே ஆட்சியைப் பறிகொடுப்பதாக ஆகிவிடலாம்.

ஜே.வி.பியை நேச சக்தியாக அடையாளம் காண்பதற்கு சுதந்திரக் கட்சியினுள் காட்டப்பட்டு வரும் கபடத்தனமான அவசரம் இவற்றின் பின்னணியில் உருவானதாகவே இருக்க முடியும் அதேநேரத்தில் முதலாளிமார்களின் செல்வாக்கையும் சுதந்திரக் கட்சி நிரந்தரமாக நம்பமுடியாது. ஏனெனில், ஐ.தே.க்வே உலக முதலாளித்துவத்தின் செல்லப்பிள்ளை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஜே.வி.பி. போன்ற இடதுசாரிகளுடன் விட்டும் தொட்டும் உறவுகளை வைத்திருக்கும் பொ.ஐ.மு மீது வர்த்தக உலகம் நம்பிக்கை வைப்பதே இல்லை.

எனவே, சுதந்திரக்கட்சியிடம் அசைக்க முடியாத சொத்தாக இருப்பது பௌத்த சிங்கள பேரினவாத தளம் மட்டுமே.

எனவேதான் அதே தளத்திற்குச் சொந்தம் கொண்டாடுவதற்கு ஜே.வி.பியை தனிக்காட்டு ராஜாவாக வெளியே விட்டுவிடக் கூடாது என்பதில் பொ.ஐ.மு. எச்சரிக்கையாக இருக்கிறது.

இதனாலேயே ஜே.வி.பியை மடக்கி எப்படியும் அதனுடன் கூட்டு வைப்பதில் மிகுந்த ஆர்வங்கொண்டிருக்கிறது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி.

கூட்டு முன்னணி அமைப்பதில் வெற்றிகாணும் பட்சத்தில் அவர்கள் பெறக்கூடிய அதிஉச்ச அளவு எம்பிக்கள் எத்தனைபேர்? அமைச்சுப் பொறுப்புக்கள் எத்தனை என்று வரையறை செய்து கொள்ளமுடியும்.

### சிறிய துணைக்கட்சி

இதனை மக்கள் முன் பிரகடனம் செய்யும்போது மக்கள் ஜே.வி.பியை ஒரு சிறிய துணைக்கட்சியென்று புரிந்து கொள்வார்கள். என்றுமே தனியாக ஆட்சிக்கு வரமுடியாத கட்சியென்றும் பண்டாரநாயக்க தலைமையில் தங்கி நின்று செயற்படும் உதிரிக்கட்சியென்றும் இனங்கண்டுகொள்வர்.

இதனால் தலைமைக்கான முக்கிய போட்டியொன்று தவிர்க்கப்படலாம் கருவேப்பிலைபோல பயன்படுத்தி விட்டு தேவை முடிந்தபின்னரும், அவர்களும் பதவிகளைப் பெற்று அவற்றின வழியே இயல்பாக ஏற்படும் அவமதிப்புகளுக்கும் உள்ளாகிய பின்னரும், அவர்களை கைவிட்டும் விடலாம்.

**கலைவாணன்**

அவ்வாறு கைவிட்ட நிலையிலும் பிரிந்து செல்லமுடியாத நிலையில் இன்றைய சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் போன்று ஒட்டிக்கொண்டு இருக்கும் நிலையும் ஏற்படலாம் என்று சுதந்திரக் கட்சி சிந்திக்கிறது.

ஐக்கிய இடதுசாரி முன்னணி என்னும் பெயரில் சமசமாஜ, கம்யூனிஸ்ட்கட்சிகளை சுதந்திரக் கட்சி தன்னுள் இழுத்துக் கொண்ட காலத்திலும் இது போன்ற ஒரு அவசரம் காட்டப்பட்டது.

முதலாளித்துவ வர்க்கத்தின் ஓரளவான எதிர்ப்பு இருந்தபோதிலும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் தலைமை இடதுசாரிகளுடன் முன்னணி அமைத்தது.

அத்துடன், உடனடி இலக்காகிய ஆட்சியைப் பிடிக்கவும் முடிந்தது. நீண்டகால இலக்காக இடதுசாரிகளை விழுங்கி ஏப்பம்விட்டு நிம்மதியடையவும் முடிந்தது.

### ஸ்ரீமாவோ கண்ட வெற்றி

நாட்டை ஆளப்பிறந்த இரண்டு பெரிய கட்சிகள் என்ற வட்டத்தினுள் மூன்றாவது தலைமை ஒன்று வளர்வதோ ஆட்சியைப் பிடிக்கும் திசையில் முன்னேறுவதோ இவ்வாறு தடுக்கப்பட்டது. குடும்ப ஆட்சிகள் நிலைத்தன.

அமரர் பண்டாரநாயக்கவின் இனவாத ஆயுதத்தினால் எதிர்த்து அழிக்க முடியாமற்போன சக்திகளை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 1970களில் அணைத்து அழிப்பதில் வெற்றிகண்டார்.

இன்று சமசமாஜக் கட்சியின் தலைவர், தனது எம்.பி.பதவிக்காக நீதிமன்றம் செல்லும்நிலை ஏற்படுவதற்கு அன்றே அத்திவாரம் போடப்பட்டிருந்தது.

இவ்வாறு நீண்ட காலத்திட்டத்தின் அடிப்படையில் இதுவரை செயற்பட்டு வந்ததன்மூலம் பௌத்த சிங்கள இனவாதத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் உயிரூட்டி வந்தது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

இப்பொழுது வேகமாக வளர்ந்து வரும் ஜே.வி.பி. சுதந்திரக் கட்சியின் அந்தத் தளத்தை தனதாக்கி கொள்ளப் பார்க்கிறது.

சிவப்புக் கொடியை ஏந்திய வண்ணம் தொழிலாளர் வர்க்கத்தின் பொருளாதார போராட்டங்களை முன்னெடுக்கிறது ஜே.வி.பி. அதேவேளை, பௌத்த குருமார்களிடம் ஆசிபெற்று தம்மை சிறந்த பௌத்தர்கள் எனக் காட்டிக்கொள்கின்றனர் ஜே.வி.பி. தலைவர்கள்.

தமிழர்களுக்குத் தனியான எந்தவொரு சலுகைகளும் கிடையாது. அவர்களின் போராட்டங்களை ஆயுத முனையில் அடக்கவேண்டும் எனக் கூறி சிங்களப் பேரினவாதத்தின் காவலராக உயர்வு பெறத் துடிக்கிறது.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு முன்னர் இருந்திராத இந்தப் போக்கு கடந்த தேர்தலில் ஜே.வி.பிக்கு 60சதவீத எம்.பி.பதவிகளை அதிகரித்துக் கொடுத்திருந்தது. இது சுதந்திரக்கட்சியின் புத்திஜீவிகளைத் திடுக்கிடவைத்தது அரசியல் இரகசியம் ஆகும்.

மொத்தத்தில் பேரினவாத நிலைப்பாட்டில் சுதந்திரக் கட்சித் தலைவர்களை விஞ்சி நிற்கும் ஜே.வி.பியினர் இடதுசாரி நிலைப்பாட்டில் என்.எம். பெரேராவையும், பீற்றர் கெனமனையும், பிலிப் குணவர்த்தனவையும் மிஞ்சிவிட்டனர்.

இது இலங்கையில் சிங்கள பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பெற்று, ஆட்சியமைப்பதற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் இரண்டு தகைமைகளாகும்.

### தமிழரின் சுயநிர்ணய உரிமை

புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றும் மார்க்சிசக் கோட்பாடுகளின் வரிகளை உச்சரித்த ஆரம்ப காலங்களில், தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டுமென்று ஜே.வி.பி. கோரியிருந்தது.

பல்வேறு இனங்கள் வாழும் நாட்டில் சிறுபான்மையினருக்கு வழங்கப்படவேண்டிய உரிமைகள் பற்றி பேசியிருந்தது.

ஆனால், நாடாளுமன்ற ஆட்சியை வாக்குகள் மூலம் பெறுவதற்கு முடிவுசெய்த இன்றைய காலகட்டத்தில் இலங்கைத் தமிழர்களை எதிரிகளாகப் பார்க்க ஆரம்பித்துள்ளது.

அதேநேரத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள தமிழ் மக்களின் வாக்குகள் தனக்கு உதவக்கூடியவை என்று தீர்மானித்துக்கொண்டுவிட்டது.

வடக்கு - கிழக்கிற்கு சமச்சீரற்ற அதிகாரப் பரவலாக்கல் கொடுக்கப்படுவதை மூர்க்கத்தனமாக எதிர்க்கிறது.

வடக்கு - கிழக்கில் வாழ்பவர்களைவிட வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழர்களின் தொகை அதிகம் என்றும் பிரசாரம் செய்து வருகிறது ஜே.வி.பி.

பல மாதங்களாக ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பிக்கு இடையில் நடைபெற்று வரும் முன்னணி அமைக்கும் பேச்சுகள் இழுபறியில் முன்னேறி வருகின்றன. அதிகாரப் பரவலாக்கல் விடயமும் அதிகாரப் பதவிகளைப் பகிர்ந்து கொள்ளும் விடயமும் சிக்கலுக்குள் மாட்டியிருக்கின்றன.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் போல் நாம் ஏமாறத்தயாரில்லை என்று ஜே.வி.பி.எம்.பி. லால் காந்தா எச்சரிக்கையுணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அன்று சமசமாஜ, கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கும் இதுபோன்ற எச்சரிக்கையுணர்வு தாராளமாகவே இருந்தது. ஆயினும், அவர்களை ஸ்ரீமாவோ மடக்கித் தனது சேலைத் தலைப்பில் முடிந்து வைத்தார் என்பது சரித்திரம். ✦

---

# வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உள்ளூராட்சி ஆணையாளர் பாராட்டு

தெல்லிப்பழை,ஜூலை24

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் நடத்திய சிறந்த உள்ளூராட்சி சபைகளை தெரிவுசெய்யும் போட்டியில் சிறந்த பிரதேச சபைக்கானத் தேர்வில் மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்று வெற்றியீட்டிய வலி. வடக்கு பிரதேச சபைக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

மிகவும் இடர்பாடான சூழ்நிலையில் இயங்கிவரும் இப்பிரதேச சபை மாகாணத்தில் 2ஆவது சிறந்த பிரதேசசபையாகத் தெரிவாகியுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

வெற்றியீட்டிய பிரதேச சபை, நகர சபை, மாநகரசபை என்பவற்றிற்கான விருது வழங்கும் வைபவம் கடந்த திங்கட்கிழமை பி.ப.4.30 மணிக்கு திருகோணமலை சென். ஜோசப் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதற்காக வெற்றியீட்டிய உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், சிரேஷ்ட அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். (3-150)

---

### உத்தேச இடைக்கால நிர்வாக சபையில்

# முஸ்லிம்களின் எதிர்பார்ப்புக் குறித்து பொதுத்திட்டம் ஒன்றை வரைய முடிவு

வடக்கு - கிழக்குக்கான உத்தேச இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவேண்டிய அதிகார அலகு மற்றும் பங்களிப்புத் தொடர்பாக முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொதுவான திட்டம் ஒன்றைத் தயாரித்து முன்வைக்க வேண்டும்.

நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் எம்.பிக்கள் சந்தித்துப் பேசியபோது இவ்வாறு முடிவுசெய்யப்பட்டது.

அலரி மாளிகையில் மாலை 5.30 மணியளவில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

முஸ்லிம் எம்.பிக்கள் தரப்பில் அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், அதாவுல்லா, பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் மற்றும் மயோன் முஸ்தபா, எம்.எச்.மஹ்ரூப், ஏ.அஸீஸ், எம்.எஸ்.எம்.தௌபீக், நிஜா தௌபீக், ஹரிஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் சந்திப்பில் பங்குபற்றினர்.

பிரதமருடன் பேச்சுக்களில் ஐ.தே. கட்சித் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, அமைச்சர் கரு ஜெயசூரிய ஆகியோர் பங்குபற்றினர்.

அரசு தற்போது முன்வைத்துள்ள தற்காலிக நிர்வாகக் கவுன்ஸில் தொடர்பான திட்ட வரைவு குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த நிர்வாகக் கவுன்ஸிலில் தங்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று முஸ்லிம்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் குறித்து பொதுவான ஆவணம் ஒன்றை முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து - இணக்க அடிப்படையில் - தயாரித்து வழங்க வேண்டும் என்று சந்திப்பில் முடிவு செய்யப்பட்டது. (ம)

---

# சமாதானத்திற்கு சர்வதேச சமூகம் தரும் ஆதரவு தவறாகப் பிரயோகம்!

## புலிகளுக்கு அழுத்தம் தர அதனைப் பயன்படுத்தும் அரசாங்கம்

**இந்தக் கட்டுரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியானது. அதன் தொடர்ச்சி இன்று பிரசுரமாகின்றது.**

கொழும்பில் அமையும் எந்தவொரு மத்திய அரசும் தமிழர்களின் நல்வாழ்வை முதன்மைப்படுத்தி தீர்த்து வைக்கப்போவதில்லை என்பதை தமிழர்கள் வரலாற்று ரீதியாகவும் உணர்கின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இன்றுவரை சமாதானத்தின் அனுகூலங்கள் பெறமுடியாது போயுள்ள நிலையை வைத்தும் அவர்கள் உண்மை நிலையை உணர்கின்றார்கள். தமக்கான உரிமைகளையும் வாழ்வையும் வளங்களையும் சிங்கள அரசுகள் தாம்பாளத்தில் வைத்துத் தரப்போவதில்லை. இதனை நன்கு உணர்ந்த நிலையில் தமக்கு வேண்டியவற்றை பறித்தெடுக்கவல்ல தலைமையின் தேவையைத் தமிழர்கள் உணர்கின்றனர்.

இருகட்சிகள் மாறிமாறி நாட்டை ஆளுவதும் ஒரு கட்சி முன்னெடுக்கும் முயற்சிகளை மறுகட்சி மறுதலிக்கும் வரலாற்றையும் கொண்ட நாட்டில் பலத்தைக் காட்டிப் பேரம்பேசும் சக்தியொன்றைத் தாம் காப்பாற்ற வேண்டுமென்று தமிழர்கள் நியாயமாகவே விரும்புகின்றனர்.

இதன் காரணமாகவே அரசியல் பின்னணியுடன் கூடிய குற்றச்சாட்டுக்கள் புலிகள்மீது சுமத்தப்படும்போது தமிழர்கள் உஷாராக இருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு இறுதியான ஒரு தீர்வு கிடைக்கும்வரை புலிகள் பலவீனப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. இதனைத் தென்னிலங்கை அரசியற் கட்சிகள் புரிந்துகொண்டு செயற்படுவதில்தான் எதிர்காலமும் சமாதானமும் ஏற்படமுடியும். அரசு தமிழர்களை ஏமாற்றப் பார்க்கிறது என்று அச்சங்கொள்ளும் போதெல்லாம் தமிழர்கள் புலிகளை அண்ணாந்து பார்க்கின்றனர்.

புலிகளின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாயிருந்த சிங்கள அரசியல் தலைமைகளினதும் சிந்தனைகளினதும் பிரதிபலிப்பே தமிழர்கள் புலிகளை ஏற்றுக்கொள்வதற்குக் காரணமாகும்.

### காணியற்றவர் நிலை

12 லட்சம் மக்கள் காணியற்று இருக்கிறார்கள் என்று காணி அமைச்சர் புள்ளிவிவரங்கள் வெளியிட்டு வருகின்றார்.

அவர்களுக்கு அரச காணிகளை வழங்கும் நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்கிறார்.

அவரது அரசு தமிழ் மக்களின் சொந்தக் காணிகளையும் வீடுகளையும் பறித்து ஆயுதப்படைகளுக்கு வழங்கிவிட்டு சாக்குப்போக்கு சொல்லிக்கொண்டிருக்கும் வேளையிலேயே இந்தக் காணி வழங்கும் திட்டம் அமுலாகிறது.

தமிழர்கள் இதனை எவ்வாறு நோக்குவர் என்பதை உணரக்கூடிய எவரும் தமிழர்கள் ஏன் புலிகளை சகித்துக்கொள்கின்றனர் என்பதையும் புரிந்துகொள்வர்.

உயர் பாதுகாப்பு வலயங்களை மீண்டும் அவர்களிடம் கொடுக்குமாறு போராடும் தலைமையை பாதுகாக்க அவர்கள் நினைப்பது இயல்பானதே.

'சமாதானப் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டு சந்தேக நிலைமை தலைதூக்கிவிட்ட இன்றைய நிலையிலும் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக தென்னிலங்கையில் 'முட்டையில் மயிர் பிடுங்கும்' மனப்பான்மை வியாபித்திருப்பது ஆரோக்கியமானதல்ல.

சர்வதேச சமூகம் சமாதானத்திற்குத் தரும் ஆதரவை புலிகளுக்கு அழுத்தம் தரும் கருவியாகப் பயன்படுத்தி அரசு ஆறுதலடைகிறது. புலனாய்வுப் போரையும் தீவிரப்படுத்தி வருகிறது.

அதேநேரத்தில் பலகோடி பெறுமதியான ஆயுதக்கொள்வனவும் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது.

1994இல் சமாதான ஆணையை மக்களிடம் பெற்ற அன்றைய அரசு பின்னர் 'முருங்கைமரம் ஏறியதுபோல' இந்த அரசும் முயற்சிப்பதை மக்கள் மனக்கண்களில் காண்கின்றனர்.

ஆனால், அதேநேரத்தில் உருப்படியான இடைக்கால நிர்வாகமொன்றிற்கு கொடுக்கப்படக் கூடிய முக்கியத்துவம் சமாதானத்தில் ஏற்பட்டுள்ள தடங்கலை நிவர்த்தி செய்யும் என்பது உறுதி. (முற்றும்)☆

# உடத்தலவின்னவில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்குக் காணி; பிந்துனுவெவவில் கொல்லப்பட்டவர்களுக்கு என்ன கொடுத்தீர்கள்?

## சதாசிவம் எம்.பி. நாடாளுமன்றில் கேள்வி

"கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமைச்சர்களே மீறலாமா? நாடாளுமன்ற ஆலோசனைக்குழு பரிசீலனை செய்யாத ஒரு விடயத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியாது."

-இவ்வாறு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார் ஜே.வி.பி. உறுப்பினரான விமல் வீரவன்ஸ.

காலை பெருந்தோட்டத்துறைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இறப்பர் ஆராய்ச்சி சபைகள் திருத்தச் சட்டவரைவை சபையில் சமர்ப்பித்தபோதே விமல் வீரவன்ஸ இந்த ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்.




வழமையாக ஒரு சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டபின் அது நாடாளுமன்ற ஆலோசனைக்குழுவில் பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே இரண்டாவது வாசிப்பும் அதன் மீதான விவாதமும் நடைபெற வேண்டும். சபாநாயகரின் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. இதனை சகல அமைச்சர்களும் ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், பொறுப்பு வாய்ந்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இந்த நடைமுறையை மீறிவிட்டார். எனவே, நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவில் பரிசீலனை செய்யப்படாத இந்த சட்டவரைவு மீது விவாதம் நடத்த முடியாது என்று விமல் வீரவன்ஸ எம்.பி. பூர்வாங்க ஆட்சேபனையைக் கிளப்பினார்.

இதனால், சட்டவரைவை முன்வைத்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல அதிர்ச்சி அடைந்து ஸ்தம்பித்துப் போய் நின்றார். ஆனால், ஆளும் கட்சிக் கொறடாவும் தொழில், தொழில் வாய்ப்புகள் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க, அமைச்சர் கிரி யெல்லவுக்கு சமயோசிதமாகக் கைகொடுத்து உதவினார். ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ஸவின் கூற்று, நூற்றுக்கு நூறு சரியானதே. அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்ற குண்டைத் தூக்கிப் போட்டார்.

அமைச்சர் சமரசிங்கவின் இந்தக் கூற்று ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, எதிர்த்தரப்பு உறுப்பினர்களுக்கும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்திவிட்டது. சில நிமிட இடைவெளிக்குப்பின் அமைச்சர் மஹிந்த சமரசிங்க-வழமையான பாணியில்-விமல் வீரவன்ஸவை மடக்கிவிட்டார்.

அதாவது, விமல்வீரவன்ஸ ஆட்சேபனை எழுப்பியதும் சரி, அதற்கான உரிமையும் அவருக்கு உண்டு. இதை நாம் மறுக்கவில்லை.

ஆனால் இப்பொழுது பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் முன்வைத்துள்ள இறப்பர் ஆராய்ச்சி சபையை மீளமைப்பது தொடர்பான திருத்தச் சட்டம் ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது. அரசியல் கட்சி முரண்பாடுகளுக்கும், சர்ச்சைகளுக்கும் அப்பாற்பட்ட பிரச்சினைக்கு உரிய ஒன்றும் அல்ல. எனவே, இதனை இங்கு விவாதிக்க வேண்டாம் என விமல் வீரவன்ஸ அடம்பிடிக்க மாட்டார் என நம்புகிறேன்.

இனிமேல், நாடாளுமன்ற ஆலோசனைக்குழுவின் பரிசீலனை செய்யப்படாத எந்த ஒரு விடயமும் இச்சபையில் விவாதத்திற்கு எடுக்கப்பட மாட்டாது என உறுதி அளிக்கின்றேன் என்றார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க. அமைச்சரின் கூற்றுகளையும் உறுதிமொழியை

யும் ஏற்றுக்கொண்ட விமல் வீரவன்ஸ, இறப்பர் ஆராய்ச்சி சபை திருத்தச் சட்டவரைவுமீதான விவாதத்தைத் தொடரலாம் ஆட்சேபனை இல்லை என்றார்.

அமைச்சர் மஹிந்தசமரசிங்கவின் சமயோசிதமான நடவடிக்கையால் தடைப்படவிருந்த விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. இதனால், அமைச்சர் அனைவரது பாராட்டையும் பெற்றார்.

இறப்பர் ஆராய்ச்சி சபை தொடர்பான விவாதம் இறப்பர் இழுபடுவது போல் இழுத்துக் கொண்டே சென்றதே தவிர, அது தொடர்பாக ஆக்கபூர்வமான ஆலோசனைகளை எவரும் முன்வைக்கவில்லை. இந்த விவாதத்தில் பேசியவர்கள் தோட்ட அபிவிருத்தியைப் பற்றியே பேசினார்களே தவிர அங்கு பணிபுரியும் தொழிலாளர்களைப் பற்றி எதுவும் பேசவில்லை.

காலை முதலே சோபை இழந்திருந்த சபை, மாலையில் சற்றுச் சூடு பிடித்தது. நுவரெலியா மாவட்ட பொது மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான எஸ்சதாசிவம், பெருந்தோட்டத்துறை சீரழிவுகளை வெளிப்படுத்தினார். அங்கு காணப்படும் நிர்வாக சீர்கேடுகளே பல ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்படுவதற்கான காரணம் என்றும் சுட்டிக்காட்டினார்.

கம்பனித் தோட்டங்கள் நஷ்டம் அடையும் போது அவற்றை தனியாரிடம் கொடுக்கப் போகின்றீர்கள். அப்படியான தோட்டங்களை அங்கு தொழில் புரியும் தொழிலாளர்களிடமே ஒப்படைத்தால் இன்னும் சிறப்பாக நடத்துவார்கள் என்றார் சதாசிவம் எம்.பி.

சதாசிவம் எம்.பியின் பேச்சு கடைசியாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் பக்கம் திசை திரும்பியது.

அதாவது, உடதலவின்னவில் கொல்லப்பட்ட பத்து இளைஞர்களின் குடும்பங்களுக்கும் அமைச்சர் தலா ஓர் ஏக்கர் காணி வழங்குவதாகக் கூறியுள்ளார்.

அதேவேளை, பிந்துனுவெவயில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்களினதும், தலவாக்கொல்லயில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கும் காணிகளை வழங்க வேண்டும். இதைச் செய்வாரா அமைச்சர் ஆறுமுகம் என்றும் சவால்விடுத்தார் சதாசிவம் எம்.பி.

அவரது கேள்விக்கு எவருமே பதில் அளிக்கவில்லை.

ஆனால், விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய பெருந்தோட்டத்துறைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரிஎல்ல, சிறுதேயிலைத் தோட்டப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு கூடுதலான மானியங்கள் வழங்கப்படும். மானியம் பெற காணி உறுதிகள் தேவையில்லை என்றும், குறிப்பிட்ட இடத்தில் ஒருவர் பத்து வருடங்கள் தொடர்ச்சியாக வசித்து வந்துள்ளார் என்பதை கிராமசேவகர் ஒருவர் உறுதிப்படுத்தினால் அந்த நபரும் தேயிலைப் பயிர்ச் செய்கைக்கான மானியத்தைப் பெறமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

எப்படியோ எந்தவிதமான எதிர்ப்புகளும் இன்றி இறப்பர் ஆராய்ச்சி சபைகள் திருத்தச் சட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றம் இன்று மீண்டும் கூடுகிறது.

(ம)


### வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்க அறிவித்தல்



கடந்த 21.07.2003இல் யாழ்ப்பாணத்தில் வீதியால் வந்த ஓட்டோவை சுன்னாகம், சூராவத்தையைச் சேர்ந்த பொதுமகன் ஒருவர் வாடகைக்கு அமர்த்திச் சென்று பயணி பிறதேவைக்காக சுன்னாகத்தில் இறங்கிய சமயம் அவர்களது பொருள்களுடன் ஓட்டோ மறைந்த சம்பவம் யாழ். குடாநாட்டில் வாடகைச் சேவையிலீடுபடும் அனைத்து ஓட்டோ உரிமையாளர்/சாரதிகளுக்கும் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஆங்காங்கே சில சம்பவங்கள் நடைபெறுகின்றன. எமது சங்கப் பதிவில் இல்லாத ஓட்டோவே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது.

எனவே பயணிகள் ஓட்டோக்களை வாடகைக்கு அமர்த்தும் போது ஓட்டோ இலக்கம், நிறம், ஓட்டோக்களின் தரிப்பிடக் குறியீடு என்பவற்றையும் அடையாளம் கண்டுகொள்ளுதல் வேண்டுமென பல தடவைகள் நாம் அறிவுறுத்தியுள்ளோம். கூடியவரை தரிப்பிடங்களில் வாடகைக்கு அமர்த்துதல் உகந்தது.

எனவே, ஓட்டோ உரிமையாளர்கள் - சாரதிகள் எமது சங்கத்தில் பதிவுசெய்து அங்கத்துவ அட்டையைப்பெற்று சேவையிலீடுபடுமாறு மீண்டும் அறியத்தருகின்றோம்.

*குறிப்பு:* களவுபோன பொருள்கள் விற்பனைக்கு வந்தால் மேற்படி சங்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(20650) (25-16-17) - நிர்வாகம்.



### வைத்தியப் பிரதிநிதி பதவி வெற்றிடம்

வடமாகாணம் முழுவதற்குமான எட்னா மருந்து விநியோகத்தரின் மருந்து வகைகள் விற்பனையை அபிவிருத்தி செய்யக்கூடிய ஊக்கம் நிறைந்த 20இற்கும் 23இற்கும் இடைப்பட்ட வயதில், க.பொ.த. A/L சித்திபெற்ற வைத்தியப் பிரதிநிதிகளுக்கான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

***உடனடி***

**நேர்முகப் பரீட்சை**

**Walk in Interview**

நேரம் : காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணிவரை.

காலம் : இன்றும் (24.07.2003 -25.07.2003) நாளையும்.

இடம் : ஜெகன் பார்மஸி - பல்பொருள் விற்பனை நிலையம்.
462B, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது தேவையான ஆவணங்களுடனும் சான்றிதழ்களுடனும் சமுகந்தரவும்.

(20651) (31-12-18)



### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 27 - 03 - 1930



உதிர்வு 27 - 06 - 2003

**திருமதி கனகரத்தினம் நாகம்மா**

அன்பின் திருவுருவே! ஆனந்தத்தின் புகலிடமே!
சொந்தங்கள் நாம் இங்கே சேர்ந்து நிற்கையிலே
பந்தங்கள் நீயறுத்துப் பாதிவழி போன தேனோ?
எந்தெந்தப் பிறவிகள் நீ எடுத்தாலும்
மீண்டும் எம் முறவில் - நீ
வந்து பிறப்பாய் என எண்ணுகிறோம்- அம்மா!

மகன்
சி.க.பாலசிங்கம்
கிராம அலுவலர் - J/66
மற்றும் குடும்பத்தினர்.

*மூளாய் கிழக்கு,*
*சுளிபுரம்.* (20654) (32-14-17-31)





உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

# வளரும் சர்வதேச வர்த்தகத்துறையில் எமது மாணவருக்கு பயிற்சி அவசியம்!

## யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

வலி.தெற்கு,ஜுலை24

பெரும் வளர்ச்சி கண்டுவரும் சர்வதேச வர்த்தகத் துறையில் எமது மாணவர்களும் பயிற்சி பெறவேண்டியது இன்றைய காலகட்டத்தில் அவசியமாகும்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற "வணிகநாதம்" சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரியின் கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் பராதாகிருஷ்ண சர்மா தலைமையில் சஞ்சிகை வெளியீடு நடைபெற்றது.

கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தமது உரையில் கூறியதாவது:-

கல்வியினுடைய நோக்கம் ஒழுக்கமுள்ள குடிமக்களை உருவாக்குவதேயாகும். சிறந்த ஒழுக்கமுள்ள சமூக பொருத்தப்பாடுடைய குடிமக்களை சமூகத்துக்கு வழங்கி அவர்களூடாக அவர்களின் குடும்பத்துக்கு, கிராமத்துக்கு, சமூகத்துக்கு பொருளாதார விருத்திகளை மேம்படுத்தவேண்டும்.

இன்று சர்வதேச வர்த்தகம் ஒரு உயர்வளர்ச்சி கண்டுள்ளது. மேற்கு நாடுகளின் இந்த வளர்ச்சி எங்களுடைய நாட்டிலும் பிரதிபலிக்கின்றது. அதற்கேற்ப எமது மாணவர்களும் அந்தத் துறையில் பயிற்சி பெறவேண்டும். மேற்குநாடுகளிலும் சரி, எமது தலைநகரத்திலும் சரி, பங்குச்சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர்கள் தமது வருமானத்தை பலமடங்கு அதிகரித்துக் கொள்கிறார்கள். எமது நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய நிலையில் பல வெளிநாட்டு மூலதனங்களை இங்கு கொண்டு வரக்கூடிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இன்று எமது நாட்டில் நிலவும் சமாதானச் சூழ்நிலையில், எமது பிரதேசத்தை மேம்பாடடையச் செய்வதில் ஆர்வங்காட்டவேண்டும். பல உலக நாடுகளின் நிதி உதவியோடு பல புனரமைப்பு வேலைகள், சமூக மேம்பாட்டு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவற்றை செய்வதற்கேற்ற ஆளணியினர் இல்லாதிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஒரு சர்வதேச தொழில்நுட்ப நிறுவனம் இங்கு தனது பணிகளை மேற்கொள்ள, அதற்குப் பொருத்தமான ஆளணியினரை நாம் வழங்க முடியாத நிலையில் இருக்கிறோம். இன்றைய சர்வதேச மாற்றங்களுக்கு ஏற்ப எமது மாணவர்களை நாம் பயிற்றுவிக்க வேண்டும்.

### கல்வி வளர்ச்சி

1970ஆம் ஆண்டு புகுத்தப்பட்ட புதிய கல்வி மறுசீரமைப்பானது தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது. இதனோடுதான் வர்த்தகத்துறை வளர்ச்சி ஆரம்பித்தது. 1980களில் கூடுதலான கவர்ச்சிகரமான பாடத்துறையாக வணிகத்துறை விளங்கியது. சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்கள் இத்துறையில் நாட்டம் கொண்டு உயர்கல்வி பயில ஆரம்பித்தனர். அத்தோடு பல்கலைக்கழகங்களிலும் கூடுதலான மாணவர்கள் வணிகத்துறைக்கு ஈர்க்கப்பட்டு, அத்துறை இலங்கையின் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் வளர்ச்சி கண்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வணிக கல்வி வளர்ச்சி ஏற்பட, இங்குள்ள பாடசாலைகள் வணிகம் சார்பான சஞ்சிகைகளை வெளியிட ஆரம்பித்தன. வணிகத்துறை வளர்ச்சியடைய இத்தகைய சஞ்சிகைகள் மக்கள் மத்தியில் தோன்றுவது கட்டாய தேவையாக இருந்தது.

### தமிழ்மொழியில் சஞ்சிகை வெளியீடுகள்

வர்த்தகத்துறை சார்ந்த பல நூல்கள் ஆங்கில மொழியிலேயே எழுதப்பட்டிருந்தன. சர்வதேச ரீதியிலான வர்தகத் துறைசார் தகவல்கள் ஆங்கிலமொழி நூல்களிலேயே காணப்பட்டன. அவற்றை தமிழ்மொழியில் எமது மாணவர்களுக்கு வழங்க வேண்டியிருந்தது. அதனால் பல்கலைக்கழக மட்டத்திலும் சரி, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மட்டத்திலும் சரி, வர்த்தகம் சார்ந்த ஏனைய தொழில் நிறுவனங்களிலும் சரி, மற்றும் வங்கிகள் உட்பட எல்லா நிறுவனங்களிலும் சரி அவற்றால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகளை தமிழ்மொழியில் வெளியிடுவதிலேயே ஆர்வங்காட்டின. அதேபோல பாடசாலைகளும் சஞ்சிகைகளை வெளியிட ஆரம்பித்தன.

### நூலக வளர்ச்சி

புதிய கல்வி மறுசீரமைப்புக் காலத்திலும் (1997-1998) அதற்கு முன்பும் மாணவர்களுடைய நிலையை ஆய்வு செய்த குழுவினர் மாணவர் மத்தியில் உள்ள பல்வேறு குறைபாடுகள் தீர்த்துவைக்கப்படவேண்டும் என ஒரு முன்மொழிவை வைத்தார்கள். அதில் மிக முக்கியமான ஒன்று நூலகப் பயன்பாடு.

மாணவர்கள் பாடசாலைகளில் நூலகங்களைப் பயன்படுத்துவதில்லை. அறிவுத் தேடல்களில் ஈடுபடுவது அருகி வருகிறது. இதனால் அவர்களுடைய கல்விப்பெறுபேறுகளும் நாடு எதிர்பார்க்கின்ற அவர்களுடைய ஆற்றல்கள் எமக்குக் கிடைக்கவில்லை. எமது நாடு பொருளாதார சுபீட்சத்தில் முன்னுக்கு வருவதற்கு இவர்களுடைய கல்விமுறை தடையாக உள்ளது. எனவே, நூலகங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என அரசு முடிவுசெய்தது.

நூலக பாவனைக்கு முக்கியத்துவம் அளித்து மாணவர்களுடைய தேடலுக்கு வழி செய்யப்படவேண்டும் என்ற போக்கிலே, அரசினால் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இன்று பாடசாலைகள்தோறும் நூலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நூலகத்துடன் தொடர்புபட்ட சஞ்சிகை வெளியீடுகளும் மாணவர் ஆற்றல்களை வெளிப்படுத்தும் முயற்சியே. கடந்த பத்துவருடங்களுக்கு மேலாகப் பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் 'வணிகநாதம்' தொடர்ந்து வெளிவருவது பாராட்டுக்குரியது.

மாணவர்களுடைய முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு இவ்வாறான முயற்சிகள் மிகமுக்கியமானவை. பாடசாலைகளில் நாம் வழங்கும் பயிற்சிகள்தான் சமூகத்துக்கு செல்கின்றது. அதனூடாகத்தான் சமூகத்திலே பல மாற்றங்களை - வளர்ச்சிகளை ஏற்படுத்த முடியும் - என்றார் அவர்.(ஒ-152)

'அப்பலோ' ஆஸ்பத்திரி ஏற்பாட்டில்

# இதய சிகிச்சை தொடர்பான நேரடிப் பயிற்சிப்பட்டறை

'அப்பலோ' வைத்தியசாலையின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள வைத்தியசாலைகளின் இதய சிகிச்சை வைத்தியர்களுக்கான ஒருநாள் நேரடிப் பயிற்சிப்பட்டறை ஒன்று கடந்த 11ஆம் திகதி நடத்தப்பட்டது.

இதய ஓட்டைகளைக் கொயில் மூலம் அடைப்பது எப்படி? என்பது தொடர்பான விளக்கங்கள் நேரடி அறுவைச்சிகிச்சைகள் மூலம் அளிக்கப்பட்டன.

டாக்டர் கே.சிவகுமார் தலைமையில் இந்த நேரடிப் பயிற்சி நிகழ்வுகள் நடைபெற்றன.

இப்பயிற்சிப்பட்டறை தொடர்பாக டாக்டர் சிவகுமார் தெரிவித்ததாவது:-

"நான் கடந்த ஆண்டு ஜுலை மாதம் 'அப்பலோ' வைத்தியசாலையில் இணைந்து கொண்டேன். கடந்த ஒரு வருடத்தில் 'அப்பலோ' வைத்தியசாலைமூலம் நாம் 120இதய துவாரங்களை 'கொயில்'கள் மூலம் வெற்றிகரமாக அடைத்திருக்கிறோம். கர்ப்பிணித்தாய்மார்கள் ஒழுங்கான போசணை உணவுகளை உட்கொள்ளாததனால் குழந்தைகளின் இதயத்தில் இந்த துவாரங்கள் ஏற்படுகின்றன. அவற்றை மிகவும் பாதுகாப்பாக அடைக்கும் முறையே இது.

"இந்த முறை பற்றி 'அப்பலோ' வைத்தியசாலையின் ஏற்பாட்டில் ஏனைய வைத்தியசாலைகளின் இதய சிகிச்சை வைத்தியர்களுக்கும் இங்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் ஆறு நோயாளிகளுக்கு வைத்தியர்களின் முன்னிலையில் நேரடியாக இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது" - என்று கூறினார்.

இந்நிகழ்வில் கொழும்பிலுள்ள அரச, தனியார் வைத்தியசாலைகளைச் சேர்ந்த 25இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் கலந்துகொண்டனர்.



அப்பலோ வைத்தியசாலையின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற பயிற்சிப்பட்டறையில் ஏழு வயதுச் சிறுமி ஒருவருக்கு இதய துவாரத்தை அடைக்கும் சத்திரசிகிச்சையை டாக்டர் சிவகுமார் தலைமையிலான குழுவினர் ஏனைய வைத்தியர்களுக்குச் செய்துகாட்டுகின்றனர்.

# வர்ண பிரதியெடுக்கும் இயந்திரம் 'லெக்ஸ் மார்க்' இலங்கைச் சந்தையில்!

இலங்கையில் முதன்முறையாக 'லெக்ஸ் மார்க்' என்ற வர்ணப் பிரதியெடுக்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரே இயந்திரத்தில் பல்வேறு தொழில்நுட்பங்களைக் கொண்டது இவ்வியந்திரம். தொலைநகல், ஈ - மெயில் போன்ற பல வசதிகளைக் கொண்ட இந்த வர்ணப் பிரதிபண்ணும் இயந்திரத்தை 'லெக்ஸ்மார்க்' நிறுவனம் கடந்த 8ஆம் திகதி உத்தியோகபூர்வமாக கொழும்பு 'ட்றான்ஸ் ஏசியா' ஹோட்டலில் வைத்து வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தியது.




இந்த இயந்திரத்தில் பிரதியெடுக்கும் வர்ணப்படங்கள், பத்திரிகைகள் போன்றவை எவ்வித மாற்றங்களும் இன்றி அதில் இருக்கும் வணணம் அப்படியே பிரதிபண்ணக்கூடிய நவீன தொழில்நுட்பத்தை இது கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட வர்ணப் பிரதிபண்ணும் இயந்திரம் 125நாடுகளில் எதிர்பார்த்ததைவிட கூடுதலான அளவில் சந்தைப்படுத்தப்பட்டு விற்பனையாகியுள்ளது.

மிகவும் அதியுயர் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள இந்த இயந்திரம் இலங்கையில் பெருமளவு சந்தை வாய்ப்பைப் பெறும் என்பது அந்நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து தெரியவந்திருப்பதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

உச்ச தொழிற்பாடு, குறைந்த விலையில் உயர்ந்த தொழில்நுட்பத்திறனுடன் பல வடிவங்களைக் கொண்ட வர்ணப் பிரதிபண்ணும் இயந்திரங்கள் இலங்கையில் சந்தைப்படுத்தப்பட்டுள்ளன. துல்லியமாகப் படங்களைப் பிரதிபண்ணும் 'லேசர்' முறையிலான தொழில்நுட்பம் புகுத்தப்பட்ட இந்த இயந்திரங்கள் இலங்கையில் பெருமளவு சந்தை வாய்ப்பைப் பெறுமென அந்த நிறுவனத்தின் தெற்காசியாவுக்கான சந்தைப்படுத்தும் முகாமையாளர் ஹர்சா சமரஜீவ தெரிவித்தார்.

தொழில் வளம்

# விழிப்புலன் குறைவை நிவர்த்திக்கும் 'விசுடைன்' சிகிச்சை முறை அறிமுகம்

## ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில்

ஐம்பது வயதைக் கடந்தவர்களுக்கு முதிர்ச்சி காரணமாக இயல்பாகவே ஏற்படும் விழிப்புலன் குறைவை நிவர்த்திக்கும் 'விசுடைன்' சிகிச்சைமுறை ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நிழற்பட செயற்றிறன் கொண்ட (Photo Dynamic Therapy) இச்சிகிச்சைமுறையில் நோயாளியின் குருதியினுள் லேசான தாக்கத்தை விளைவிக்கக்கூடிய மருந்து ஏற்றப்படுகிறது. அத்துடன், விழித்திரையின் பின்பகுதியிலுள்ள குருதிக்கலன்களின் கசிவுகளை அடைத்துவிடும் வகையில் லேசான லேசர் கதிர்வீச்சும் பயன்படுத்தப்படுகிறது.

"இலங்கையில் முதன்முறையாக அறிமுகஞ்செய்யப்பட்டுள்ள "இச்சிகிச்சை ஏற்கனவே ஆறுபேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அது வெற்றி அளித்தும் உள்ளது. பார்வை குன்றியவர்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் இதனால் ஏற்பட்டுள்ளது. இந்தப் புரட்சிகர சிகிச்சை முறையை நாமே அறிமுகம் செய்துள்ளோம் என்பதில் பெருமை அடைகின்றோம்" என்று ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வைத்தியசாலை தவிசாளர் டாக்டர் எச்.எச்.ஆர் சமரசிங்க கூறினார்.

'விசுடைன்' (Visudyne) என்னும் விலை உயர்ந்த மருந்தொன்றே இதற்குப் பயன்படுத்தப்படுகிறது. குறும்பார்வை குறைபாடு உடையவர்களும் இதனைச் செய்து பயன் அடையமுடியும். 'விசுடைன்' சிகிச்சை நோயாளியின் கட்புலனை உறுதிநிலைப்பாட்டிற்குக் கொண்டு வருவதுடன் பார்வை மேலும் சீர்கெடுவதைத் தடுக்கும்.

'விசுடைன்' சிகிச்சைக்குத் தேவையான லேசர் கதிர்வீச்சு உபகரணம் சுமார் 3மில்லியன் ரூபாவாகும். இதனைச் சுவிஸர்லாந்தின் 'நொவாடிஸ் ஒப்தமிக்ஸ் நிறுவனம்' இலங்கை முகவர்களான 'ஏபீசீ பார்ம சேர்விஸஸ்' மூலமாக இலவசமாக வழங்கியுள்ளது என்று ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் இச்சிகிச்சையினை வழங்கும் குழுவின் தலைமை டாக்டர் வாரியப்பொல தெரிவித்தார். (ஒ)

# சுன்னாகம் மக்களுக்கான சேவையில் ஹற்றன் நஷனல் வங்கி அதிக பங்களிப்பு

## உதவிப் பொதுமுகாமையாளர் வாக்குறுதி

வலி.தெற்கு,ஜுலை24

"சுன்னாகம் பகுதி அபிவிருத்திக்கும் பிரதேச மக்களின் நல்வாழ்வுக்கும் ஹற்றன் நஷனல் வங்கி கூடிய பங்களிப்பு வழங்கும்"

ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் ஆர்.தியாகராசா மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

மேற்படி வங்கியின் யாழ்ப்பாண மாவட்டத்தின் இரண்டாவது கிளை கடந்த 11ஆம் திகதி உத்தியோகபூர்வமாக சுன்னாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

சுன்னாகம் கிளையின் முகாமையாளர் சிவ.சுந்தரேசன் வரவேற்புரை நிழ்த்தினார்.

இந்நிகழ்வில் உதவிப் பொதுமுகாமையாளர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்ட யுத்த அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதி மக்களின் புனர்வாழ்வுக்கு எமது வங்கி அதிக அளவில் உதவிகளை வழங்கும். இப்பகுதி மக்களின் நல்வாழ்வுக்கு மட்டுமன்றி, வர்த்தகம், விவசாயம் போன்ற துறைகளின் வளர்ச்சிக்கும் எமது வங்கிமூலம் உதவிகள் வழங்கப்படும். 2ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் எமது வங்கிகளில் பணவைப்புகளை மக்கள் செய்திருந்தாலும் ஒவ்வொரு நூறு ரூபா வைப்புக்கும் 25 ரூபா வரையிலேயே கடன் வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கூடிய அளவு கடன் வசதிகளை வழங்கி விவசாய, கைத்தொழில், வர்த்தக முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கப்படும் - என்றார் அவர்.

(ஒ-152)

## ...நனை



...வசியமே ...தயத்திலேதான் .. பார்வையை உள்நோக் ...கள். இறைவனை உடனே காணலாம். இதுதான் சுலபமான ...தெய்வீகம் உங்கள் உள்ளேயே உறைகிறது என்பதில் நம்பிக்கை ...யுங்கள். நீங்கள் தெய்வீகத்தின் ஒரு பகுதி என்பதை விடாது நினைவு ...த்திக் கொண்டீர்களானால், நீங்களே தெய்வமாக மாறிவிடுவீர்கள்.

அதற்குப் பதிலாக தெய்வீகத்திலிருந்து விலகியிருப்பதாகக் கருதி ...ர்களானால், நீங்கள் எப்போதுமே தெய்வீகத்திடமிருந்து விலகியே ...ருப்பீர்கள். உங்கள் தொழிலையோ, வேலையையோ விட்டுவிடவேண் ...டும் என்று அவசியமில்லை. ஆனால், உங்கள் பணிகளை சமுதாயத் ...திற்குத் தொடர்ந்து செய்துவாருங்கள். ஆனால், நீங்கள் தெய்வீகம் என்பதை மட்டும் எப்போதும் நினைவில் வையுங்கள். தனது பக்தர்கள் சமுதாயத்திற்குச் செய்யும் செயற்பாடுகளில் ஏதேனும் குறை நேர்ந்தால், தெய்வமே உடன் வந்து உதவுகிறது.

(ஆதாரம்:- சனாதன சாரதி)

# கரபந்தாட்டச் சம்பியன்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் சம்பியனாகின.

இந்த இறுதியாட்டங்கள் நல்லூர் சட்டநாதர் ஆலயத்திற்கு அருகிலுள்ள சங்க மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு மின்னொளியில் இடம்பெற்றன.

முதலில் நடைபெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்க விளையாட்டுக்கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஐந்து செற் கொண்ட ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 3-0 என்ற நேர் செற்களில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தை வென்று சம்பியனாகியது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும், அச்சுவேலி இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதின.

இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 3-0 என்ற நேர் செற் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

(ம-5-86)

# கொழும்புத்துறை வீதிகள் புனரமைப்பு பணி ஆரம்பம்

அரியாலை,ஜூலை24

யுத்த அனர்த்தங்களினால் பெரும் சேதத்திற்கு உள்ளாகியிருக்கும் கொழும்புத்துறை கிழக்குப் பிரதேச வீதிகளை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது மூன்றாம் குறுக்கு வீதியில் திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, முதலாம், இரண்டாம் குறுக்கு வீதிகளின் திருத்தப் பணிக்கென கற்கள் பறிக்கப்பட்டும் வருகின்றன.

இதேசமயம், கொழும்புத்துறை மேற்குப் பிரதேசத்தில் கணக்கர் சந்தியில் இருந்து பாஷையூருக்குச் செல்லும் புங்கன்குளம் வீதியைப் புனரமைப்பதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

இதேவேளை, ஏனைய வீதிகளான சுவாமியார் வீதி, விபுலானந்தர் வீதி, இலந்தைக்குளம் வீதி, கந்தர்மணியம் வீதி போன்றவற்றைப் புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

(எ-17)

## வீடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் சிவாஜி கணேசனின் 'இரும்புத்திரை' (தமிழ்) விடியோக்காட்சியாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(எ)

## உதைபந்தாட்டப் போட்டி

வலி.வடக்கு,ஜூலை24

பருத்தித்துறை லீக் யாழ். மாவட்ட முன்னணி உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு வளர்மதி விளையாட்டுக்கழகமும் தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

(ம-5-86)


University of Jaffna, Sri Lanka

PROFESSOR SIVAPATHASUNTHARAM MAGESWARAN MEMORIAL LECTURE

Date & Time : 25th July 2003 at 3.00 p.m.
Venue : Kailasapathy Auditorium, University of Jaffna
Delivered by : Professor Miss S.Arasaratnam, Dean, Faculty of Medicine.
Title : "UNDERSTANDING GLYCAEMIC INDEX FOR A HEALTHY LIFE"

Those who are interested are cordially invited

(சி-29113) (31-14-17)

Vice - Chancellor
University of Jaffna.


# சமய சந்நிதியில்

தென்மராட்சி,ஜூலை24

கெற்பேலி தரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவுடன் உற்சவம் நிறைவு பெறும். (ஒ-10-117)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜூலை24

குருநகர் புனித யாகப்பர் ஆலய திருவிழாவில் இன்று வியாழக் கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைத் திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், மாலை 5 அணிக்கு தேர்ப்பவனியும் இடம் பெறும். (எ-10-30)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜூலை24

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவத்தில் நாளை மறுதினம் மாலை வைரவப்பெருமானின் திருமஞ்ச வெளிவீதி உலா இடம்பெறும்.

மறு நாள் ஞாயிற்றுக்கிழமை பிராயச்சித்த அபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும். மாலை, தொடர் சொற்பொழிவாற்றிய இளம் சைவப் புலவர் நா.கலாதரன் கௌரவிக்கப்படவுள்ளார். (எ-10-30)

★ ★ ★

கரவெட்டி,ஜூலை24

வல்வை கல்லுடையவர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தீர்த்த உற்சவம் எதிர்வரும் ஆடி அமாவாசையன்று காலை 9 மணிக்கு வல்வை ஊறணி சமுத்திர தீர்த்தத்தில் நடைபெறவுள்ளது. (எ-10-70)

★ ★ ★

சுழிபுரம்,ஜூலை24

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

மானிப்பாய் புனித அன்னாள் ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5.30மணிக்கு நற்கருணை ஆராதனையும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 7மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளன. (எ-10)


லஷ்சுமி சினிமா
இணுவில்
சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த
பாறை
காட்சி நேரம்: 11.00,3.00,7.00 (பு.நே.)
(C/28976) (31-14-17)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (ரீலஸ்)
தினசரி: 10.30,2.30,6.30,9.30.
(C28851) (31-14-17)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பாடசாலை மாணவர்கள் பெரியோர்கள் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்
கரண், குஷ்பு நடித்த
ஸ்ரீ பண்ணாரி அம்மன் (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
THE ART OF THE WAR
தினசரி 8.45 இரவு.
(C28977) (31-14-17)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம் (ரீலஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00 (பு.நே.)
28 முதல்
தினசரி இரவு 7.00 மணிக்கு ஆங்கிலத் திரைப் படம் காண்பிக்கப்படும்.
(C28767) (31-14-17)

வீபேட்டி அச்சுவேலி
எதிர்வரும் வெள்ளி முதல்
விஜய் மற்றும் பிரியங்கா சோப்ரா நடித்த
தமிழன் (ரீலஸ்)





தினசரி காட்சிகள் 3.00, 7.00 (புதிய நேரம்)
காலை 11.00 மணிக்கு THE WORLD IS NOT ENOUGH (ரீலஸ்)
(C/28688) (31-14-17) (007 ஜேம்ஸ் பாண்ட்).


### ஓகஸ்ட் முதலாம் திகதி முதல்

# மோ.சைக்கிளில் பயணிக்கும் இருவரும் "ஹெல்மெட்" அணிவது கட்டாயம்

## போக்குவரத்து பொலிஸார் கண்டிப்பான அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை24

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும் இருவரும் தலைக் கவசம் (ஹெல்மெட்) அணியவேண்டும் என்ற விதிமுறை எதிர்வரும் முதலாம் திகதிமுதல் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ். போக்குவரத்துப் பொலஸார் அறிவித்துள்ளனர்.

இது குறித்து போக்குவரத்துப் பொலீஸார் மேலும் தெரிவித்திருப்பதாவது :

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும் இருவரும் கட்டாயம் தலைக்கவசம் அணியவேண்டும் என நாம் பல தடவைகள் அறிவித்திருந்தோம். ஆனால், பயணிகளில் பலர் அதனை இன்றுவரை ஏற்று நடப்பதாகத் தெரியவில்லை.

இதனால் தான் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் இருவரும் கட்டாயமாக 'ஹெல்மெட்' அணிந்திருக்க வேண்டும் என்ற ஒழுங்குவிதியை இறுக்கமாக நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

எனவே, அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் தலைக்கவசம் அணியாது பயணம் செய்யும் மோட்டார் சைக்கிள் பயணிகள் குற்றப் பணத்தை உடனடியாக செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

இதேவேளை - யாழ். ஆஸ்பத்திரியின் முன்பாக வீதியில் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தி வைப்பதனால் தினந்தோறும் பல விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. இதன் காரணமாக துவிச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்துமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். இந்த ஒழுங்கு வீதியை மீறி நடப்பவர்களின் துவிச்சக்கர வண்டிகள் பொலஸாரினால் மீட்கப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்படும். பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரப்படும்.

யாழ். கஸ்தூரியார் வீதி ஒரு வழிப்பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதை பல தடவைகள் பொது மக்களுக்கு நாம் தெரியப்படுத்தி இருந்தோம். ஆனால், இதனை முறைப்படி கடைப்பிடிக்காமையால் தினந்தோறும் பல விபத்துச் சம்பவங்கள் இந்த வீதியில் இடம்பெற்று வருகின்றன- என்று மேலும் கூறப்பட்டது. (எ-6)

## கைதடிச் சங்கத்தின் விசேட கிளை சாவகச்சேரியில்

தென்மராட்சி,ஜூலை24

தென்மராட்சி தெற்கு 'பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து இன்னமும் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் சாவகச்சேரிப் பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கான நிவாரண உலர் உணவுப் பொருளகள் வழங்குவதற்கான விசேட கிளை நிலையத்தினை கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் சாவகச்சேரியில் ஆரம்பித்துள்ளனர்.

முன்னர் சாவகச்சேரி இலங்கை வங்கி இயங்கிய கட்டடத்திற்கு முன்பாக உள்ள தனியார் வீடொன்றில் இக்கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

115 ஏபி புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்களை இக்கிளையில் பெற்றுக்கொள்ளலாமெனவும் சங்கத்தலைவர் சி.சுப்பிரமணியம் தெரிவித்தார். (எ-117)

## கசிப்பு விற்ற 5 பேருக்கு ரூ.41,000 அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்றமை ஆகிய குற்றச்சாட்டுகளில் ஐவருக்கு யாழ். நீதிமன்றம் 41ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகம் பற்குணராசா என்பருக்கு கசிப்பு வைத்திருந்தமைக்காக 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

கொடிகாமத்தைச் சேர்ந்த செல்லத்துரை கிருஷ்ணராசா என்பருக்கு கசிப்பு வைத்திருந்தமைக்காக 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 3 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கணேஷ் சங்கரர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகம் சிவராசா மற்றும் அந்தோனிப்பிள்ளை யோசவ் ஆகிய மூவருக்கு அனுமதிப் பத்திரம் இன்றி சாராயம் விற்றமைக்காக தலா ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தலா ஆயிரம் ரூபா தர்மப்பணமும் - செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டார்.

(ம-5)

## கொட்டன் அடிக்கு இலக்காகி விவசாயி பலத்த காயம்

தென்மராட்சி,ஜூலை24

தோட்டப் பயிரை மாடு மேய்ந்ததால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதால் விவசாயியொருவர் கொட்டன் அடிக்கு இலக்காகிப்படுகாயம் அடைந்தார்.

மிருசுவிலில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமி (வயது - 54) என்பவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

(எ-117)


வழிகாட்டல் கருத்தரங்கு

கணனித்துறையில் உயர் கல்வியை/ பட்டப்படிப்பை இலங்கையில்/ வெளிநாடுகளில் தொடர விரும்பும் மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று (24.07.2003) வியாழககிழமை மாலை 4.00 மணிக்கு IIS நிறுவன மண்டபத்தில் John keells Institute இனரால் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் பாடசாலை மாணவர்கள், பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டவர் கள், பல்கலைக்கழக, தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் தொழில்புரிபவர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(C29096) (31-14-17)


# மரண அறிவித்தல்

## சின்னையா இராசநாயகம்

கோகுலவீதி, கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னையா இராசநாயகம் அவர்கள் நேற்று (23.07.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையா - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் அமரர் சிவபாக்கியம் (நல்லபிள்ளை) அவர்களின் அன்புக் கணவரும் அமரர் இரத்தினம், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியநாதன், பாக்கியராணி, பாக்கியராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் வனஜராணி, பாலரவீந்திரன், சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஜீவன், கனில்சன், மதுசனா, சாஜுஜா, நிவேகாஸ், ரிஷிகேஸ்வர் ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2003) வியாழக்கிழமை பி.ப.2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோகுல வீதி,*
*கோண்டாவில்.*

(20658) (31-14-17)

தகவல்:
பிள்ளைகள்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கடைப் பாவனைக்குரிய இரண்டு சோக்கேஸ்சும் (10அடி உயரம் - 21/2 அடி அகலம்), 4 பிறாக்கியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.சதானந்தன், இல.5/1, புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (20612)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுள்ள, செவ்வாய்க் குற்றமில்லாத, M.B.B.S டாக்டர் மணமகனுக்கு 1974 இற்குப் பின்னர் பிறந்த கல்வியறிவுள்ள அழகான மணமகள் தேவை. வைத்தியத்துறை சாந்தோர விரும்பத்தக்கது. ஜாதகக் குறிப்பு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1963, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (20629)

## தவறிவிட்டது

ம.நந்தபாலன் என்பவரின் Ray-Ban கொம்பனி மூக்குக்கண்ணாடி ஒன்று கவருடன் சங்கிலியன் வீதியில் 22-07-2003 மதியம் தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 226 3608 (காலை 8 மணிக்கு முன்) என்ற இலக்கத்துடன தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (20610)

வவுனியாவை சேர்ந்த சிவகடாட்ச சர்மா குகநாதக்குருக்கள் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 650391236V) மற்றும் லைசன்ஸ், காப்புறுதிப்பத்திரம் என்பன முகமாலைக்கும் மந்திகைக்கும் இடையில் தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 'சாரதாபீடம்'', துன்னாலை மத்தி, கரவெட்டி. T.P 021 226 3378 எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (20604)

வரணி வடக்கு, வரணியைச் சேர்ந்த கந்தசாமி மனோகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன அடங்கிய கைப்பை 22-07-2003 அன்று நயினாதீவுக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P 0776052572, 070 212430. (20627)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில், நந்தாவில் ஒழுங்கையில் 4 பரப்புக் காணியில் 4 அறைகளைக் கொண்ட, சகல வசதிகளும உடைய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.12, சம்பியன் லேன், கொக்குவில். (20626)

## இறைச்சிக்கோழிகள் தேவை

இறைச்சிக்கோழிகள் தேவைப்படுகின்றன. உடன் தொடர்பு கொள்ளவும். இல.19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (20630)

## விற்பனைக்கு

புதிய கணனி (Computer)
Pentium-3,
பெரிய நாய்க்கூடு - 10,000/-
என்பன
விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
சி.காசிப்பிள்ளை
(உத்தரவுபெற்ற நில அளவையாளர் - சேவையர்)
No.6, சென். ஆன்ஸ் லேன்,
மானிப்பாய். (20638) (21-13-18-25)

## வேலையாள்கள் தேவை

பலசரக்குக் கடையில் வேலை செய்யக் கூடிய முன் அனுபவமுள்ளவர்களும், கணக்கு எழுதுவதில் முன் அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை ஒருவரும் தேவை. நேரில் வரவும்.
தொடர்புகளுக்கு:
அம்பாள் களஞ்சியம்
இல.7, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 222 5299. (20647) (21-13-18-26)

# சமாதான அரசியல் தீர்வு காண பெண்கள் அமைப்புக் கோரிக்கை

கொழும்பு, ஜூலை24

தற்போது நிலவுகின்ற சமாதான முன்னெடுப்பு நிரந்தரமாவதற்கும் இலங்கை மக்கள் யாவரும் மனித உரிமைகளும் ஜனநாயகமும் கொண்ட ஒரு சூழலில் வாழ்வதற்கும் உரிய, நிரந்தரமான சமாதானம் உதயமாவதற்கும் பல்லின சமூகங்களைச் சேர்ந்த பெண்களாகிய எம்மால் ஒன்றிணைந்து செயற்படமுடியும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும். தமிழ்ச் சமூகத்தினருக்கு மட்டுமல்லாது, மீண்டும் ஒரு 1983 ஜூலையைக் காண விரும்பாத சகல இலங்கையர்களுக்கும் இருக்கும் ஒரேநம்பிக்கை இதுவேயாகும்.

1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி நாடு முழுவதும் இடம்பெற்ற கொடூர கறுப்பு ஜூலையின் 20 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு விடுத்திருக்கும் அறிக்கையில் சமாதானத்திற்கான பெண்கள் அமைப்பு, இலங்கையின் அன்னையரும், புதல்வியரும அமைப்பு ஆகியவற்றின் இணைப்பாளரான துஷாரி மடஹாபொல இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசாங்கமே திட்டமிட்டு நடத்திய, நவீன இலங்கை வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பயங்கரமான அந்த இனக்கலவரத்தை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். இரண்டு தசாப்தங்கள் கடந்த நிலையில் இன்னும் தமிழ்ச் சமூகத்திடம் மன்னிப்புக் கோராதிருக்கின்ற நிலையை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, அக்கலவரம் ஏற்படத்தக்கதாயிருந்த எந்தவொரு நிலைமையையும் திருத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படாதிருப்பதையும் கண்டிக்கிறோம்.

இனப்பிரச்சினைக்குச் சமாதானமான அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம். அந்த இனக்கலவரத்திற்காக மன்னிப்புக் கோருவதுடன், இலங்கையில் வாழ்ந்துவரும் எந்தவொரு இனத்தினருக்கும் எதிராக அரசாங்கத்தினால் தூண்டப்படுகின்ற கலவரமொன்று இனிவருங்காலத்தில் நிகழக்கூடாது என்பதற்காக எம்மால் இயன்ற சகல முயற்சிகளையும் செய்வோம் என்றும் உறுதிகூறுகிறோம். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## மாடுகளை காயப்படுத்தும் விஷமிகள்

வரணி, ஜூலை24

வரணிப் பிரதேசத்தில் மேய்ச்சலுக்குச் சென்றுவரும் கால்நடைகள் இனந்தெரியாதோரின் கத்திவெட்டுக்கு இலக்காவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வரணி வடக்கு மற்றும் மாசேரி ஆகியவற்றின் வடக்கு எல்லைப் பகுதியான முள்ளிவெளியை அண்டிய காட்டுப் பகுதியிலேயே கால்நடைகள் மேய்ச்சலுக்குச் செல்வது வழக்கமாகும்.

இந்தக் காட்டுப் பகுதியில் வைத்தே இவை கத்திவெட்டுக்கு இலக்காகி வருகின்றன. அண்மையில் இவ்வாறு மேய்ச்சலுக்குச் சென்ற ஒரு சோடி மாடுகள் திருடப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது. (ம-10-170)

## அறிவித்தல்

### வாரிசுரிமைக்கான கோரிக்கைகள்
### திருநெல்வேலிச் சந்திக் காணி

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், நல்லூர்ப்பற்று திருநெல்வேலி இறை "அலமந்தை" எனும் காணியில் ஒரு துண்டு காலஞ்சென்ற கார்த்திகேசு நமசிவாயத்தினது வாரிசுகளுக்கு பி/1224 இலக்க பிரிவிடுதல் வழக்கின் இறுதி தீர்வைப்படி சொரியலாகவுள்ளது.

மேற்கண்ட சொரியல் காணி சம்பந்தமாக சொல்லப்பட்ட நமசிவாயத்தின் வாரிசுகளிடமிருந்து கோரிக்கைகள் இருப்பின் அதில் ஒரு வாரிசுரிமைக்காரியான கீழ் காணுபவரோடு ஒரு மாத காலத்தினுள் தொடர்புகொண்டு வாரிசுரிமையை நிலைநிறுத்துமாறு இத்தால் வேண்டப்படுகின்றீர்கள்.

திருமதி அன்னரத்தினம் குமாரகுலசிங்கம
மே/பா கு.மோகன்
193, ஆடியபாதம் ரோட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(20648) (21-25-13-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது சமுர்த்தி வங்கிச் சங்க
வலயம் 02இன் கட்டட உரிமையாளர்

### கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

சமுர்த்தி முகாமையாளரும்,
சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களும்.
சமுர்த்தி வங்கிச் சங்கம்.
ஆவரங்கால்.
(20646) (21-26-13-18)

# STUDY IN INDIA

A/L சித்தியடைந்தவர்களும், 2003 ஆண்டு A/L பரீட்சை எழுதியவர்களும், O/L சித்தியடைந்தவர்களும் இந்தியாவில் Bangalore University, Anna University, Periyar University ஆகிய பல்கலைக்கழகங்களின் பட்டதாரியாக வாய்ப்பு


**Available Courses**

Engineering, Electronics, Communication, Mechanical, IT, B.Sc Micro Biology, Genetics, Computer Science, BBM, BBA, BCA, B.Com, and Diploma Courses, மற்றும் பாட நெறிகள்

*Admission, Visa and Hostel arrangements* செய்து கொடுக்கப்படும்

எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 50ற்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

மேலதிக விபரங்களை **யாழ்ப்பாணத்தில்** பெற்றுக்கொள்ள




IPAS- Institute of Professional Accounting Studies
199, Main Street, Jaffna. Tel: 0777-563292

Affiliated to
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road,
Colombo-06. Tel: 074- 512 591

S.K.Ads

## மரண அறிவித்தல்

### முருகேசு கந்தசாமி

புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி நேற்றுமுன்தினம் (22.07.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் ஞானேஸ்வரியின் பாசமிகு கணவரும் சதீஸ்வரன், வாகினி, சாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேஸ்வரி (கனடா), சிவக்கொழுந்து (கனடா), பாலசிங்கம் (ஜேர்மனி) காலஞ்சென்ற அம்பிகைநாதன் மற்றும் பொன்னம்மா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற கருணா (கனடா), நந்தம் (ஜேர்மனி), நடராசா (ஜேர்மனி) மற்றும் இராமநாதன் (சுவிஸ்), விஜயேந்திரம், மணிதேவி, ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2003) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினரும்
பொ.க்ஷகசபை, து.அன்னம்மாவும்.

6ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (20643)(21-25-18-13)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 493 |
| திகதி | 22.07.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4069046-4083796

வெற்றி இலக்கங்கள் **09 29 36 47**

லக்கினம்
கும்பம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 2,405,650/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **3,141,100/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 328,943 | 10 | 3,289,430 |
| 2 இலக்கங்கள் | 30,309 | 20 | 606,180 |
| 1 இல + லக்கினம் | 30,194 | 30 | 905,820 |
| 2 இல + லக்கினம் | 2,734 | 100 | 273,400 |
| 3 இலக்கங்கள் | 815 | 500 | 407,500 |
| 3 இல + லக்கினம் | 64 | 5,000 | 320,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,405,650 | - |
| மொத்தம் | 393,063 | - | 6,202,330 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,202,330/-

தொடர் இல. 5061768க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஜூலை 25ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
4071904-0-27
4081274-2-33
4074683-2-01
4078385-7-06
4074977-1-74

PHOENIX O&M

# குடிதண்ணீர் கிணறுகளில் மலக் கழிவுகளின் கலப்பு!

## பரிசோதனைகளில் திடுக்கிடும் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.நகரப்பகுதி, மந்திகை, சுன்னாகம் ஆகிய பகுதிகளில் உள்ள குடிதண்ணீர் கிணறுகள் சிலவற்றின் நீரில் மலக்கழிவுகள் கலந்திருப்பது பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் திடுக்கிடும் தகவலை யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் வெளியிட்டன. திணைக்களத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இருந்து இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

நகரப்பகுதியில் உள்ள பிரபல உணவுச்சாலைகள் சிலவற்றின் பாவனையில் உள்ள கிணறுகள், சுன்னாகம் நீர் விநியோகப் பகுதியில் மக்கள் பாவனைக்கு வழங்கப்படும் குடிதண்ணீர் பெறப்படும் கிணறுகள், மந்திகை வைத்தியசாலை முன்பாக உள்ள கடைகளில் இருப்பவர்களால குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தப்படும் கிணறுகளில் ஒன்று ஆகியவற்றிலேயே மலக்கழிவுகள் கலந்திருப்பதாக தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவாவினால் இக்கிணறுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட தண்ணீர் கொழும்புக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. பரிசோதனைகளின் முடிவுகளின்படி இந்தக் கிணறுகளின் நீரில் மலக் கழிவுகள் கலந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, இந்தக் கிணறுகளில் இருந்து பெறப்படும் நீரைப் பயன்படுத்துவோர் நீரினால் பரவும் நோய்களுக்கு ஆளாகவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் திணைக்களம் எச்சரித்துள்ளது. (ம-15)

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

கைதடி,ஜூலை24

கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையத்தின் ஆதரவிலான மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியொன்று எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வன்னி மாவட்டத்தின் காளை மாடுகளும் பங்கேற்கவுள்ளன. (ம-10-75)

## வீதி சேதம்

கோப்பாய், ஜூலை24

கோப்பாய் கண்ணகை அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் வீதி கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமையால் மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இது குறித்து ஆலய பரிபாலன சபையினரும் பொதுமக்களும் உரிய தரப்பினரிடம் முறையிட்டும்கூட எதுவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.(ம-10-72)

## நாவற்குழியில் புதிய காவலரண்கள்

நாவற்குழிப் பாலத்தை அண்மித்த பகுதிகளில் படையினர் புதிய காவலரண்களை அமைத்து வருகின்றனர்.பாலத்தின் இருமருங்கிலும் முன்பிருந்த காவலரண்களை விட மேலும அதிகமான காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றதைக் காணக்கூடியதாகவுள்ளது.(ஒ-10-6)

## செய்திக்கொத்து

### நாயால் நேர்ந்த விபத்து!

தென்மராட்சி,ஜூலை24

வீதியால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுக்குக் குறுக்கே நாய் ஓடியதால் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் நிலைகுலைந்து வீழ்ந்து படுகாயமடைந்தார்.

கொடிகாமம், எருவன் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பளை பிரதேச சபையின் பிரதம எழுதுவினைஞர் சி. சிவப்பிரகாசம் (வயது 49) என்பவரே வலதுகாலில் காயமடைந்தார்.

இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-10-117)

### வீதியைப் புனரமைக்க கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜூலை24

மாகியப்பிட்டிச் சந்திக்கு அருகில் உள்ள நொங்குத்துறை வீதி பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியை விரைவில் புனரமைத்துத் தருமாறு மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் மானிப்பாய் பிரதேச சபைக்குக் கோரிக்கைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-10-135)

### வீதி விபத்தில் இளைஞர் காயம்!

இணுவில்,ஜூலை24

கோப்பாய், இராஜவீதிச் சந்தியில் இடம்பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞர் காயமடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் உரும்பிராய், மூன்று கோயிலடியைச் சேர்ந்த சற்குணம் விஷ்ணுவர்த்தன்(வயது-20) என்ற இளைஞரே காயமடைந்தவராவார். (ஒ-10-49)

# படையினர் ட்ரக் கவிழ்ந்து 41பேர் படுகாயமடைந்தனர்

மட்டக்களப்பு, ஜூலை24

அம்பாறை ஏறகம சிங்கபுர பகுதியில் படையினர் பயணம் செய்த ட்ரக் நேற்றுமுன்தினம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 41பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அம்பாறை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

விடுமுறையில் சென்ற அதிரடிப் படையினர் மீண்டும் கடமைக்குத் திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் அவர் சொன்னார்.

காயமடைந்தவர்கள் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (ம)

# கல்கிசையில் ரயில் மோதி மூன்று பேர் உயிரிழப்பு!

கொழும்பு,ஜூலை24

கொழும்பு, கல்கிசை ரயில் நிலையத்துக்கு அண்மையில் இடம் பெற்ற விபத்தில் ரயில் மோதி மூவர் உயிரிழந்தனர். நேற்றுமுன்தினமிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பாணந்துறையில் இருந்து கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில், கல்கிசை ரயில் நிலையத்துக்குச் செல்வதற்கான பாதையில் சமிக்ஞை கிடைக்காததனால் மாற்றுப் பாதையில் சென்றுள்ளது.

அப்போதே இந்த விபந்து இடம் பெற்றுள்ளது. ரயில் மோதிய மூவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர், மற்றொருவர் காயமடைந்தார். இது தொடர்பாக கல்கிசை பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.(ம)

# உள்ளக மேற்பார்வையில் அதிபர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்

## உடுவில் கோட்டப் பணிப்பாளர் அறிவுறுத்து

வலிகாமம்தெற்கு,ஜூலை24

பாடசாலைகளின் உள்ளக மேற்பார்வையில் அதிபர்கள் கூடிய கவனம் எடுக்கவேண்டும் என்று உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் எஸ்குபேரநாதன் பாடசாலை அதிபர்களிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பாடசாலை அதிபர்களுடைய முகாமைத்துவ செயற்பாடுகள் திருப்திகரமாக இருக்கின்றபோதிலும் உள்ளக மேற்பார்வை சரிவர செயற்படுத்தப்படாமையால் பிள்ளைகளின் அடைவுமட்டம் குறைந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் கல்விக் கோட்டக் காரியாலயத்தில் நடைபெற்றபோதே அவர் இதனை வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆங்கில பாட ஆசிரியர்களைத் தவிர ஏனைய பாட ஆசிரியர்களுக்கான தேவைகள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. போதிய ஆசிரிய வளம் உங்களிடம் உள்ள போது அவர்கள் மூலம் உச்சப் பயனைப் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். அதற்கு சீரான உள்ளக மேற்பார்வை அவசியம்.

உடுவில் கோட்டத்தில் ஒருசில பாடசாலைகள் மட்டுமே தமிழ்த்தினப் போட்டிகளில் அதிக இடங்களைப் பெற்றுள்ளன. அனைத்துப் பாடசாலைகளிலும் உரியமுறையில் தமிழ்த்தினப் போட்டிகள் நடத்தப்பட்டு போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படாமையே இதற்குக் காரணம். கவலைக்குரிய இந்நிலை எதிர்காலத்தில் நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

பாடசாலைகளுக்கு நான் விஜயம் செய்து ஆசிரியர்களுடன் நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைப் பூர்த்தி செய்யவும் கோட்டக் கல்வி அலுவலகத்துடன் அவர்களை நெருங்கிப்பழக வைத்து அவர்களிடமுள்ள அச்ச உணர்வை போக்கவும தீர்மானித்துள்ளேன்.

ஒவ்வொரு பாடசாலையிலும் அப்பாடசாலை பற்றிய பூரண தரவுகொங்கி பேணப்படவேண்டும். வினாத்தாள்கள் பேணப்படவேண்டும் மாணவர்களிடையே நட்புறவு மன்றங்கள், சுகாதார மன்றங்கள் போன்றவை ஒழுங்குபடுத்தப்பட்டு பாடசாலை சுற்றுச்சூழல்கள் பேணப்படவேண்டும்-எனவும் கோட்டப் பணிப்பாளர் அதிபர்களுக்கு எடுத்துக் கூறினார். (ம-152)



தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா உரையாற்றுவதையும் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: தென்மராட்சி செய்தியாளர்)

## விடுதலைப் புலிகளிடம் அரசு சமர்ப்பித்த

# இடைக்கால சபை வரைவை ஆராய ஜனாதிபதியால் விசேட குழு நியமிப்பு

கொழும்பு,ஜூலை24

வடக்கு - கிழக்கில் அமைப்பதற்கான உத்தேச இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விடுதலைப் புலிகளிடம் அரசு முன்வைத்துள்ள வரைவு குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி நால்வர் கொண்ட விசேட குழு ஒன்றை நியமித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள ஏனைய உறுப்பினர்களாவர்.

புலிகளுக்கு அனுப்பப்பட்ட உத்தேச இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவின் பிரதி, கடந்த திங்கள் என்று அரசினால் ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதையடுத்தே அதனை ஆராய்வதற்கென ஜனாதிபதி விசேட குழுவை நியமித்துள்ளார்.

இதேவேளை -

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி தொலைக்காட்சி மூலம் நேற்று உரையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அது பின்னர் ரத்துச் செய்யப்பட்டது.

இந்த உரையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்தும் தற்போதைய அரசியல் சூழல் குறித்தும் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விளக்க இருந்ததாக ஊடகப் பணிப்பாளர் ஜனதாச பீரிஸ் தெரிவித்தார்.

எனினும், அரசு முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகசபை குறித்து புலிகளுக்கு அனுப்பப்பட்ட மேலோட்டமான வரைவுக்கும் அந்த யோசனை தொடர்பாக வெளியிடப்படும் கருத்துக்களுக்கும் இடையே முரண்பாடுகள் காணப்படுவதாக ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பான விளக்கத்தைப் பெற்ற பின்னரே ஜனாதிபதி மக்களுக்கு உரையாற்றுவார் என்று ஜனதாஸ பீரிஸ் மேலும் சொன்னார். (ம)

### சனிக்கிழமைகளில் வங்கிச் சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை24

மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9 மணியில் இருந்து நண்பகல் 12:30 மணிவரையும் திறக்கப்படும் என்று வங்கியின் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

வாடிக்கையாளர்களின் நலன்கருதி பண வைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதுடன் தங்க நகை அடகு சேவையும் இந்த நேரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-10)

### ஆஸ்பத்திரிக்கு சலவை இயந்திரம்

யாழ்ப்பாணம், ஜூலை24

யாழ். போதனா வைத்தியசாலையின் பாவனைக்கென சலவை இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலை நோயாளர்களின் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் துணிகளைச் சலவை செய்து உலர்த்தக்கூடிய இந்த இயந்திரம் விரைவில் பயன்படுத்தப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10-6-15)

# இராணுவம் தாக்குதல் இரு பொதுமக்கள் காயம்!

வாழைச்சேனையில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் காயமுற்றுள்ளனர். கடந்த திங்களிரவு வாழைச்சேனை சந்திக்கு அண்மித்த பகுதியில் வைத்து இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

பொதுமக்களில் சிலர் இப்பகுதியில் வீதியில் டயர்களைப் போட்டு எரித்துக்கொண்டிருந்தபோது அவ்விடத்திற்கு வந்த இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டனர். தாக்குதலின் போது காயமுற்ற இருவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச்சென்றுள்ளனர்.

இத்தாக்குதல் பற்றி வாழைச்சேனை பொலிஸாரிடம் வினவிய போது, இராணுவத்தினரால் சிலர் தாக்கப்பட்டனர் என்று தமக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் ஆனால், முறைப்பாடு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தனர். (ம)

# கூட்டுறவாளர் மாநாடு கிளிநொச்சியில் நாளை

தென்மராட்சி,ஜூலை24

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்ட கூட்டுறவாளர்களுக்கான மாநாட்டினை நாளை கிளிநொச்சியில் நடத்தவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர்கள், வர்த்தக முகாமையாளர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

போட்டிப் பொருளாதார சந்தையில் கூட்டுறவுத் துறையை இணைப்பது தொடர்பாக மாநாட்டில் கருத்துரை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

# கண்காணிப்புக்குழு அதிகாரி கடற்புலித் தளபதியுடன் பேச்சு

கிளிநொச்சி,ஜூலை24

புலிகளின் கடல் போக்குவரத்து தொடர்பாக கடற்புலிகளின் விவகாரங்களுக்குப் பொறுப்பான கண்காணிப்புக் குழு அதிகாரி நேற்றுமுன்தினம் கடற்புலிகளின் தளபதி சூசையைப் புதுக்குடியிருப்பில் சந்தித்துப் பேசினார்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் டெல்வசுக்கும் கடற்புலிகளின் தளபதிக்கும் இடையில் அண்மையில் வன்னியில் இடம்பெற்ற சந்திப்பின் தொடர்ச்சியாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு கடற்பகுதிகளில் புலிகளின் கடற்போக்குவரத்து, இது தொடர்பாக கண்காணிப்புக்குழு தயாரித்துள்ள உத்தேச வரைவு ஆகிய விடயங்கள் குறித்தே இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன என்று தெரிகிறது. (ம)

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 12 . 07 . 1942



மறைவு 24 . 06 . 2003

### அமரர் ஜேமிஸ் குணரட்ணம் (குணம்)

பாசத்தின் திருவுருவாய் பண்பின் சிகரமுமாய்
எம்மருகில் நீர் இருந்தீர் பெற்றதாயினும் விட
பரிந்தேமை அன்புகாட்டி வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று சிவனடி சேர்ந்ததேன்ன?
ஆயிரம் காலமது போனாலும் உம் நினைவு
எங்களிடம் என்றும் மாறவே மாறாது!

இன்று (24.07.2003) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பெரிய மதவடி,*
*சுன்னாகம்.*

(20657) (31-14-17) - குடும்பத்தினர்.

## முத்தமிழ் கலைவிழா

வலி.கிழக்கு,ஜுலை 24

கோப்பாய் மாகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் முத்தமிழ் கலைவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு பழைய மாணவர் சங்கத்தலைவர் ஆ.ஜெயபாலசிங்கம் தலைமையில் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஶ்ரீதயாளன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் எஸ்.கவியன்பன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-10-180)


IBM Branded கணனிகள்



PERSONAL COMPUTER
Intel Pentium 4 1.8GHz/2.4GHz
NOTEBOOK / LAPTOP
Intel Pentium 4 2.4GHz
Intel Celeron 1.1GHz
3 வருட உதிரிப்பாக உத்தரவாதம்
100 % பரீட்சிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள்
கணனிகள் திருத்தித் கொடுக்கப்படும்.
MICRO PC SYSTEMS
வெள்ளவத்தை 15, 36th Lane, Col-6 074-516764
கொட்டாஞ்சேனை 82, New Chetty St, Col-13, 074-613617
யாழ்ப்பாணம் 175/3, கஸ்தூரியார் வீதி 021-222 5893


## மெய்வன்மைப் போட்டி

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் மா.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

பிரதமவிருந்தினராக சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.செல்லையாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மேற்கு போஷாக்குத் திட்ட இணைப்பாளர் ந.தவராஜகுமாரும், கௌரவவிருந்தினராக வித்தியாலய முன்னாள் அதிபர் ப.யோகானந்தசிவமும் கலந்து கொள்வர். (ம-5)

## கரப்பந்தாட்டம்

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி - மட்டுவில் மோகனதாஸ் வி.க. எதிர் பன்னாலை கணேசன் வி.க.

★ மாலை 4.30 மணி - ஆவரங்கால் நவோதயா வி.க. எதிர் கைதடி நவபுரம் வி.க. (ம-5)

## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் 27.07.2003ஆம் திகதி நடத்தப்படவிருந்த 81ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத் திணைக்களம் அறிவித்துள்ளதென்பதை அங்கத்துவ சங்கங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்
வடமாகாண
தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம்,
யாழ்ப்பாணம்.
T.P: 222 5072.

(சி-29110) (31-14-17)


இவைகளுக்கு நான் என்ன செய்வது?




உங்கள் மின் மற்றும் தண்ணீர் கட்டணங்களை செலுத்தி அனைத்து நிதிச் சுமைகளில் இருந்தும் விடுதலை பெறுங்கள்

செலான் சக்தி "பில்" தொல்லைகளை தவிர்க்கும்



செலான் சக்தி
மாதாந்த வருமான வழி

சக்தி
பண வைப்பு - "பில் தொல்லைகளில்" உதவும்
மேலும் உங்களின் பணத்தையும் சேமிக்கும்!

- முதல் வருடத்தில் உங்கள் வைப்பின் 0.1% மூலம் வங்கி மின் மற்றும் தண்ணீர் கட்டணத்தை செலுத்தும்.
- "மெரிட் றிவோர்ட்ஸ்" சலுகைகளுக்கு தகுதி உடையவர்களாவதற்கு 6 மாதங்களுக்கு சக்தி வட்டியிலிருந்து ரூபா 20,000/= ஐ ஒரு சேமிப்பு கணக்கில் பராமரியுங்கள்.
- வட்டி மாதாந்தமோ வருடாந்தமோ அல்லது முதிர்விலோ வழங்கப்படும்.

இலகுவாக உங்கள் மாதாந்த பில்களை கட்டுவதோடு உங்கள் மாத வருமானத்தையும் அதிகரியுங்கள்

மேலதிக விபரங்களுக்கு நாடெங்கும் பரந்துள்ள வலைப்பின்னலில் அமைந்த ஏதாவது செலான் வங்கி கிளையை நாடுங்கள்

தொடர்பு - 456931

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

GRACE

# திருநெல்வேலிச் சந்தை அருகே பெரும் சுகாதாரச் சீர்கேடு!

## குப்பை கூளங்கள் தேங்கிக் கிடக்கின்றன

யாழ்ப்பாணம்,ஜுலை24

திருநெல்வேலி பொதுச்சந்தைப் பகுதியில் தினம்தோறும் சேரும் குப்பை கூளங்கள் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்படாத காரணத்தினால் சந்தையின் அயல் பிரதேசத்தில் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுகாதாரப் பகுதியினரும் இது குறித்து எச்சரித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

திருநெல்வேலி வாழைக்குலைச் சந்தைக்கு அண்மையில் உள்ள பற்றை வளர்ந்த காணி ஒன்றில் சந்தைப் பகுதியில் சேரும் கழிவுப் பொருள்களை பிரதேச சபையினர் கொட்டி வருகின்றனர்.

ஆனால், நாளாந்தம் இந்த குப்பை கூளங்களை நல்லூர் பிரதேச சபையினர் அகற்றுவதில்லை என்றும் -

மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள பகுதியாகவும், அருகில் பாடசாலை அமைந்துள்ள இடமாக இது இருப்பதனாலும் - இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய் பரவும் ஆபத்து உள்ளதாகவும் சுகாதாரப் பகுதியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(எ-180)

## பள்ளத்தினுள் இறங்கிய மினிபஸ்

தென்மராட்சி,ஜுலை24

கிளிநொச்சியிலிருந்து முகமாலைக்கு பயணிகளுடன் வந்த மினிபஸ் குஞ்சுப்பரந்தன் பகுதியில் வதியை விட்டு விலகி அங்கு மணல் அகழப்பட்டிருந்த பள்ளத்தினுள் இறங்கிய சம்பவம் கடந்த செவ்வாயன்று காலை 10 மணியளவில் இடம்பெற்றது. மினி பஸ்ஸினுள் 20இற்கு மேற்பட்ட பயணிகள் இருந்தபோதிலும் தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

வீதி திருத்த வேலைக்கு தகரங்கள் வைக்கப்பட்டிருந்ததால் மற்றொரு வாகனத்துக்கு வழி விடுவதற்காக வீதியோரத்துக்கு மினிபஸ்ஸைச் செலுத்தியபோதே வீதியை விட்டு மினி பஸ் தரவைப் பகுதியில் இறங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது. மீன் சந்தையில் இருந்தவர்களை வாய்க்கு வந்தபடி பேசிய நெப்போலியன், போல் மற்றும் பாலதீபன் ஆகியோர் "இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் உங்கள் தலைகள் றோட்டில்தான் உருளும்" என்று கூறி மிரட்டிவிட்டு சென்றதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டுக் கடிதத்தின் பிரதிகள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு, விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை ஆகிய அலுவலகங்களுக்கும் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## ஆள் பிணை வாபஸ்; பிணையாளி சிறைக்கு

நீதிமன்றில் பிணை நின்றவர் தனது ஆள் பிணையை வாபஸ்பெற்றதையடுத்து பிணையில் நின்றவர் சிறையில் அடைக்கப்பட்டார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது.

கடந்த வருடம் சாவகச்சேரி பகுதியில் பெண் சிப்பாயொருவரின் மரணம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்ட பெண் சிப்பாயான ஜே.ஏ.ஏ. நில்மினி ஜெயசிங்க என்பவருக்கு பிணையாக கையொப்பமிட்ட நபர் நேற்றுமுன்தினம் தனது பிணையினை வாபஸ் பெறுவதாக நீதிமன்றில் மனு சமர்ப்பித்தார். இதனையடுத்தே பெண் சிப்பாயை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (எ-117)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவும், வடபகுதி மக்கள் தொடர்பாகவும் ஒரு பிழையான கண்ணோட்டம் தென்பகுதி சிங்கள மக்களிடம் உள்ளது.

பொங்குதமிழ் எழுச்சி என்பது சிங்கள மக்களுக்கு விரோதமானது; இனவாத நிகழ்வு என்ற எண்ணம் இங்கு உள்ளது. இது தவறான விடயமல்ல. காரணம் - எங்களுக்கும் தென்பகுதி மக்களுக்கும் இடையில ஓர் ஆழமான தொடர்பு அற்றுப்போன நிலைமை கடந்த இருபது வருடங்களாகக் காணப்பட்டது.

சிங்கள மக்களின் பிழையான எண்ணத்தை அகற்ற நாம் இதயசுத்தியுடன் ஓர் ஆழமான தொடர்பாடலை ஏற்படுத்துவதற்காக இவ்வாறான தெளிவரங்குகளை நடத்தி வருகின்றோம். இந்தச் செய்தியை ஊடகங்களினூடாக தென்பகுதி மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சிறுவர் இல்ல விவகாரம்: விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை24

உரும்பிராய் வடக்குப் பகுதியில் இயங்கிய சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் நாளை வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றன. இதன்போது பராமரிப்பு நிலையத்தை நடத்திய பெண்மணி, மேற்பார்வையாளர், இரு ஆசிரியர்கள் மற்றும் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் சிறுமி ஆகியோர் மன்றிற்குச் சமுகமளித்து சாட்சி அளித்தனர்.

இதனையடுத்து இவ்விசாரணைகளை நாளைவரை ஒத்திவைத்த யாழ் நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா, சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (எ-5)

## செல்லக்கிளி நினைவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணானது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். எனினும், இராணுவத்தினர் அதனை ஏற்க மறுத்துவிட்டு காவலரண் நிறுவும் வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டனர்.

இராணுவத்தினரின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சிலர் பலாலி வீதியில் அமர்ந்து மறியல் செய்ய முயன்றனர். இராணுவத்தினரோ பொதுமக்களை அங்கிருந்து அகற்ற முயற்சித்தனர். இதனால் அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. கலகம் அடக்கும் பொலீஸார் அங்கு வரவழைக்கப்பட்டனர். பொதுமக்கள் வீதியில் திரண்டு போக்குவரத்தைத் தடைசெய்தனர்.

இச்சம்பவம் குறித்து உடனடியாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப்பட்டது. அவர்கள் அவ்விடத்துக்கு வந்து படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரதிநிதிகளுடனும் அவர்கள் உரையாடினர்.

நினைவுத்தூபியை நிறுவுவது உடன்படிக்கையை மீறுகின்ற செயல் என்று படை அதிகாரிகள் கண்காணிப்புக்குழுவினரிடம் தெரிவித்தனர். பொதுமகன் ஒருவரது காணிக்குள் நினைவுத்தூபியை நிறுவுவது எந்த வகையிலும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல் அல்ல என்று புலிகள் தெளிவுபடுத்தினர். பின்னர் காவலரண் அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு படையினர் வெளியேறினர்.

(ஐ-86)

## நோர்வேத் தூதரகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் விளக்கம் அளிக்கவேண்டும் என்று ஜே.வி.பி. உறுப்பினர் ஹேரத் பிரதமரிடம் கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்குப் பதில் அளித்த பிரதமர் மேலும் கூறியதாவது :-

எந்த ஒரு நாட்டின் தூதரகமும தமது அலுவலக மற்றும் வெளியீடப் பாவனைக்கான தகவல் தொடர்புசாதனங்களை இறக்குமதி செய்யும் உரிமை உண்டு. தூதுவர்களுக்கான சிறப்புரிமைக்கு அமைய நமது நாட்டின் இறைமை, பாதுகாப்பு,ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு அமையவே அவை கையாளப்படவேண்டும். இதை மீறியவர்கள் (Person Non Grata) கணம் பண்ணப்படாதவர்களாகவே அடையாளம் காணப்படுவர்.

ஆனால், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நோர்வேத் தூதரகமோ அல்லது நோர்வேத் தூதுவரோ தமக்களிக்கப்பட்டிருக்கும் விசேட சிறப்புரிமைகளை மீறவில்லை.

இதேவேளை -

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஒலிபரப்புச் சேவைக்கென இறக்குமதி செய்த உபகரணங்கள் தொடர்பாக 2002ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தெளிவான அறிக்கை ஒன்றை இந்தச் சபையில் சமர்ப்பித்திருக்கிறோம்.

இலங்கையில் ஊடகவியல் ஒலிபரப்புச் கோவைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும், விதிமுறைகளுக்கும் அமையவே விடுதலைப் புலிகள் தமது ஒலிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்று உத்தரவாதம் அளித்துள்ளனர்.

இதனால் நாட்டின் இறைமைக்கோ அல்லது பாதுகாப்பிற்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

- இவ்வாறு பிரதமர் கூறினார்.

(ஐ)

## வான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூபதி (வயது 50), தனபாலசிங்கம் மகேஸ்வரி (வயது 65), மிக்கேல் பிள்ளை சவரிமுத்து (வயது 66), ஜெயபாலன் விக்ரோறியா (வயது 41) ஆகியோரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்தவர்களில் ஒரிருவரின் நிலை கவலைக்கிடமாக இருந்ததாக நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (எ-10-70)


SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்

இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும்பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited நிறுவனத்தினரும், SCS நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு சகல கணனிகளையும் நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Various Mother Board Handling ♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management ♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc..,
Duration 4 -5 Months

பாடநெறியின் முடிவில் கம்பியூட்டர் ஹார்ட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்

DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP

♦ Fundamentals of Information Technology ♦ Outlook ♦ Word ♦ Excel ♦MS Money ♦MS Project ♦Access ♦ PowerPoint ♦ Binder ♦ MS Schdule ♦ Internet, E-mail
Duration 6 - 7 Months

DIPLOMA IN COMPUTER PROGRAMMING

♦ Information Technology ♦ SAD ♦ MIS, DBMS, RDBMS, ORDBMS
♦ Visual C++(System, Bios, Memory, Disk, Network Programming) ♦ Visual Basic (Com & Dcom Level)
♦ Netware administration programming System Diagnostic Programming ♦ protocol Builds - up
♦ Visual Fox Pro ♦ Oracle ♦Java ♦ Internet, Interfacing programming
Duration 12 Months

- உத்தியோகத்தர்களுக்கான மாலை நேர வகுப்புக்கள்.
- விரிவுரைகள் யாவும் இந்தியாவிலிருந்து வருகை தந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும்.
- கூடிய நேர செய்முறைப்பயிற்சி
- குறைந்த கட்டணம்
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படும்.
- Online Classes

பயிற்சி ஆரம்பம் 02.08.2003

Soft View Computer College
Jaffna, Sri Lanka
www.arammenporulagam.com arammenporulagam@eth.net

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P: 021 222-5170

Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India. T.P : +91-44-4891286

Number 79, Jalam Gambus 11, Taman Desawan, 41200 Klang, Malasiya. T.P : +60-3-33234650

சான்றிதழ்களை மட்டுமே அடுக்கி வைத்துக்கொண்டு அடுத்து என்ன செய்வது?
சான்றிதழ்களை மட்டுமல்ல, கணனி மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களிலோ அல்லது சுயமாகவோ கணனி வேலைவாய்ப்பினை உருவாக்கிட உங்கள் கணனி நண்பன் SCC



BEACON யாழ்.
A/L 2004 Day Class
Acc.- திரு. பாலவாசன்
Eco.- திரு. மோகன்
B.st.- திரு. யசோ
Log.- திரு. மனோகரன்
ஆரம்பம்: 28.07.2003 Mon. 10a.m.
(20544)(13)



G.C.E O/L மாணவர்களுக்கான வர்த்தகமும் கணக்கியலும்
துரித மீட்டலுடன் "A" தர சித்தி பெற சிறந்த முறையில் கற்பிக்கப்படும். மாணவர்களுக்கு (தனியாக-குழுக்களாக) பிரத்தியேகமாக வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:-
ஆசிரியர் K.காந்தன்,
லிங்கம் தொலைத்தொடர்பகம்,
161, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 3251
(20649) (52)



SUBRA - சித்தன்கேணி
2005 A/L, 2004 Paper Class

| | 2005 A/L | 2004 |
|---|---|---|
| Phy. வர்ணன் | Mon.-Wen.-Fri. 3.30 - 5.30 அலைகளும் அதிர்வும். | Mon.-Wen.-Fri. 5.30 - 7.30 Paper Class |
| Chy. அன்பு | Thu.- Tue. 3.30 - 5.00 அசேதன இரசாயனம் | Thu.-Tue 5.00 - 7.00 p.m. Paper Class |
| Bio. கஜன் | Sat.-Sun 5.00 - 6.30 | Sat. - Sun. 4.00 - 5.00 Paper Class |
| C.Maths பிரதீபன் | Mon.-Fri.-Sun 4.00 - 6.00 | Mon.-Fri.-Sun. 6.00 p.m - 7.30 Paper Class |

(C/29077) (12)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.